விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 046 வள்ளுவர் ஆண்டு 2057 தை 20 செவ்வாய்க்கிழமை (03.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அபிவிருத்தி என்ற போர்வையில் வாழ்வுரிமை பறிப்பு
# 'கிவுல் ஓயா' திட்டத்துக்கு எதிராக
# நெடுங்கேணியில் ஆர்ப்பாட்டம்
## உணர்வெழுச்சியுடன் திரண்ட பொதுமக்கள்




(வவுனியா)

அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் 'கிவுல் ஓயா' திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா நெடுங்கேணியில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் வீதி விபத்து
### 7 பேர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் பிரதான வீதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்

15ஆம் பக்கம் பார்க்க

## 49 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

(கொழும்பு)

78வது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு 49 கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கத் தீர்மானித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவற்றுறையில் வீட்டுத் திட்டத்துக்கு சிவகுரு ஆதீனத்தால் காணி அன்பளிப்பு




(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் வீட்டுத் திட்டத்துக்காக சிவகுரு ஆதீனத்தால் 15 ஏக்கர் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டுத் திட்டம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ்.அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன்

16ஆம் பக்கம் பார்க்க

## நகுலேஸ்வரரின் மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பம்




16ஆம் பக்கம் பார்க்க

## இளைஞனைப் படுகொலை செய்தவருக்கு மரண தண்டனை
### கிளிநொச்சி மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கிளிநொச்சி)

பூப்புனித நீராட்டு விழாவில் இளைஞன் ஒருவரைக் கத்தியால் குத்திப் படுகொலை செய்தவருக்கு மரண தண்டனை வழங்கி கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குரவில் கிராமத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலையின் பிரதான எதிரிக்கு நேற்றுப் பகல் 12 மணிக்கு கிளிநொச்சி மேல் நீதி

15ஆம் பக்கம் பார்க்க

## சமலின் மகனைக் கைது செய்ய நீதிமன்றம் சி.ஐ.டிக்கு உத்தரவு



(கொழும்பு)

ஏர்பஸ் விமான ஒப்பந்தம் தொடர்பான விசாரணையில் முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் இளைய மகன் ஷமிந்திர ராஜபக்வை கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் துறைக்கு உத்தரவிட்டுள்ளது.

தற்போது அமெரிக்காவில் இருக்கும் ராஜபக்ஷ இந்த வழக்கில் சந்

15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.மயிலிட்டியில்
## இராணுவ வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மயிலிட்டி பகுதியில் இராணுவ வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

இதில் நவரட்ணம் என்பவரே உயிரிழந்தவராவார்.

துவிச்சக்கரவண்டியில் பயணித்த குறித்த நபர் வீதியைக் கடக்க முயன்ற போது அவர் மீது இராணுவ வாகனம் மோதியதிலேயே இந்த

15ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நல்லூர் - ஆடியபாதம்

15ஆம் பக்கம் பார்க்க

### யாழ். கோண்டாவிலில்
## வயிற்றோட்டம் காரணமாக 11 வயதுச் சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் திடீர் வயிற்றோட்டம் காரணமாக 11 வயதுச் சிறுவன் ஒருவன் மரணமடைந்துள்ளான்.

கோண்டாவில் - இருபாலை வீதியைச் சேர்ந்த மகிந்தன் லர்மிகன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.


குறித்த சிறுவனுக்கு நேற்று முன்தினம் வயிற்றோட்டம் ஏற்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு
03 - 12 - 1944

உதிர்வு
02 - 02 - 2026

## மாணிக்கம் சதாசிவம்

(ஓய்வுநிலை வருமான வரி உத்தியோகத்தர், ஓய்வுநிலை விடுதி முகாமையாளர் – கதிர்காமம் இந்துமாமன்றம்)

முருகன்கோவிலடி புலோலி வடமேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மா.சதாசிவம் அவர்கள் நேற்று (02.02.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - சின்னம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற மாணிக்கம் - முத்தம்மா தம்பதியினரின் மருமகனும் ரூபி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவகுரு, செல்லத்துரை, காலஞ்சென்ற பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தவச்செல்வம் அவர்களின் மைத்துனரும் இந்துமதி, சாருமதி (லண்டன்), சுமதி( பிரான்ஸ்), பானுமதி மற்றும் கஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெனி, முரளிதரன் (பிரான்ஸ்), பிரதாப் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் கிருத்திகனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2026) செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முருகன் கோவிலடி,
புலோலி வடமேற்கு, புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்

(C-4931)

# கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி
## சிற்றுண்டிச்சாலைக்கான ஒப்பந்தம் கோரல்


### நிபந்தனைகள்

01. 2026 ஆம் ஆண்டுக்கான ஆகக் குறைந்த ஒப்பந்த தொகை 200,000.00
02. நாளாந்த வாடகை நாளொன்றுக்கு குறைந்தது 2500.00
03. மீளளிக்கப்படாத ரூபா 1000.00 செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
04. கல்வி அமைச்சு சுற்றுநிருபத்திற்கு அமைய பாடசாலையினால் அனுமதிக்கப்படுகின்ற உணவுகள் மற்றும் பொருட்கள் மாத்திரமே விற்பனை செய்ய முடியும்.
05. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொது சுகாதார பரிசோதகர்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
06. பாடசாலைக்கு களங்கம் விளைவிக்கும் செயற்பாடு காணப்பட்டால் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும். அத்தோடு எந்தவித நிதியும் மீளளிக்கப்படாது.
07. ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பாடசாலை முகாமைத்துவக் குழுவே முடிவுசெய்யும்.
08. பணி புரிபவர்களின் வயது, உடல் நலம் என்பவற்றை பாடசாலையின் உணவுக்குழுவினர் குத்தகை எடுக்கும் நபருக்கு அறியத்தருவார்கள்.
09. விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அதிபர், கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி,ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
10. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச்சாலை விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
11. நேரடியாக சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
12. விண்ணப்பங்கள் பத்திரிகை விளம்பர திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் கிடைக்கப்பெற வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(C-4932)

தகவல் : அதிபர்

# மரண அறிவித்தல்



## அருச்சுனர் இரத்தினசிங்கம்

(ஜமுனா சவுண்ஸ் உரிமையாளர்)

தோற்றம்
05.03.1946

மறைவு
01.02.2026

கோட்டைக்காடு, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருச்சுனர் இரத்தினசிங்கம் (ஜமுனா சவுண்ஸ் உரிமையாளர்) அவர்கள் கடந்த 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருச்சுனர் - லட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பர் - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் தேவி அவர்களின் பாசமிகு கணவரும் விமலரஞ்சினி, ஜமுனா, சிவநேசன், ராஜ்குமார்(ராயு), ரஜீபன்(வெள்ளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமலிங்கம், பத்மநாதன், சுதா மற்றும் காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ் சென்றவர்களான பரமேஸ்வரி, பூமணி, தர்மலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் தங்கமலர், அமுதலிங்கம், சங்கரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பவித், பவீனா, பதுஷன், ஜதீஷன், வினுஷ்கா, கவீசன், கவிஷாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2026) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

(6731)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு திருவிழாவை அரசியல்மயமாக்காதீர்கள்!

## வடமாகாண மீனவர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவை அரசியல்மயமாக்க வேண்டாம் என வட மாகாண மீனவ சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.**

அகில இலங்கை மீனவ சங்கத்தின் இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவு வருடாந்த திருவிழா எதிர்வரும் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த திருவிழாவில் பங்கேற்பதற்காக கச்சதீவு வரும் இந்திய மீனவர்கள், அங்கு இலங்கை - இந்திய மீனவர் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடக் கூடாது எனவும் அதனை யாத்திரைத் தளமாக மாத்திரம் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய சட்ட சபைத் தேர்தல் விரைவில் வரவுள்ளதால் நீண்ட காலமாக நிலவி வரும் இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினையும் தேர்தலின் பேசு பொருளாக மாறியுள்ளது.

எனவே அதனடிப்படையில் இங்கு நடைபெறவுள்ள கச்சதீவு திருவிழாவை அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்தக் கூடாது என தமிழக அரசாங்கம் மற்றும் மீனவர்களிடம் கோரிக்கை விடுப்பதாக குறிப்பிட்டுள்ளார். (8)



சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் சுதேச மருத்துவப் பிரிவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் உடுவில் பிரதேச செயலக பிரிவின் ஆயுள்வேத பாதுகாப்புச் சபைக்கு பிரதேச செயலக சுதேச மருத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தரின் திட்ட முன்மொழிவின் மூலம் குளிசை தயாரிக்கும் இயந்திரம் உதவிப் பிரதேச செயலாளரினால் கடந்த 29 ஆம் திகதி அன்று ஆயுள் வேதப் பாதுகாப்புச் சபையின் தலைவர் மற்றும் உறுப்பினரிடம் கையளிக்கப்பட்டது.

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் கிவுல் ஓயா எதிர்ப்பு பிரேரணை நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பூர்வீக தாயகமான வடக்கு- கிழக்கில் தமிழ் இன விகிதாசாரத்தினை மாற்றியமைக்கும் அரச கொள்கையின் திட்டமிட்ட தொடர்ச்சியாகவே கிவுல் ஓயாத்திட்டம் அமைகிறது எனத் தெரிவித்து வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சபை அமர்வில் கிவுல் ஓயாத்திட்டம் தொடர்பான பிரேரணை தவிசாளர் தியாகராஜா நிரோஷினால் முன்வைக்கப்பட்டது. இப் பிரரேரணையினை சபையில் முன்வைக்க முடியாது என மத்தியில் ஆளும் தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

அவ் எதிர்ப்பினையும் மீறி தமிழ்க் கட்சிகள் அனைத்தும் எதிர்ப்பு பிரேரணைக்கு ஆதரவாக தேசிய மக்கள் சக்தியினரின் கருத்தை எதிர்த்தன.

இறுதியில் தேசிய மக்கள் சக்தி யினர் நிகழ்ச்சி நிரலில் இல்லாததை எவ்வாறு தவிசாளர் சபைக்கு ஆற்றுப்படுத்த முடியும் என வாதிட்டனர்.

இதற்கு பதிலளித்த தவிசாளர், நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாத ஒன்றை சபையின் அனுமதியுடன் தவிசாளர் அறிவிப்பாக முன்வைப்பதற்கு ஏற்பாடுகளில் இடமுண்டு என தெரிவித்தார்.


தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான காரணங்களுள் ஒன்றாக அரச அனுசரனையுடன் திட்டமிட்ட சிங்கள பேரினவாதக் குடியேற்றங்கள் வரலாற்று ரீதியாக இடம்பெற்றுள்ளன.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அதிகார சபைகள் ஊடாக குறிப்பாக மகாவலி அதிகார சபை ஊடாக ஏற்கனவே பல சிங்கள குடியேற்றங்கள் தமிழர் இன விகிதாசாரத்தினையும் அடையாளத்தினையும் இருப்பையும் அழிக்கும் வகையில் இடம் பெற்றுள்ளன.

ஆரம்பமாக அரசாங்கம் 2500 மில்லியன்களை ஒதுக்கி ஆரம்பித்துள்ள இத் திட்டத்தினை எதிர்க்கின்றோம். மேலும் பல கோடிகள் இத் திட்டத்திற்கு ஒதுக்கப்படவுள்ள நிலையில் அரசாங்கம் தமிழர்களின் வரலாற்றுத் தாயக இயல்பு வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.

இந் நிலையில், சபையில் தேசிய மக்கள் சக்தியின் ஒன்பது உறுப்பினர்களில் தலைமை தாங்கும் உறுப்பினர் இத் தீர்மானத்திற்கு எதிராகவும் ஏனைய எட்டு உறுப்பினர்களும் நடுநிலை வகித்தனர்.

தேசிய மக்கள் சக்தியைத் தவிர தமிழ்க் கட்சிகள் அனைத்தினதும் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (8)



"நான் நேர்மையானவன்" எனும் தொனிப்பொருளிலான செயலமர்வு கொழும்பு இலஞ்ச ஊழல் எதிர்ப்புக்கான தலைமை அலுவலகத்தால் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண நகரசபை மற்றும் பிரதேச சபை தவிசாளர்கள், செயலாளர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## வவுனியாவில் விபத்து

(வவுனியா)

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட ஏழு பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பாக மேலும் தெரியவருகையில், வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் பகுதி நோக்கி சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டியும், எதிரே வந்த மற்றொரு முச்சக்கர வண்டியும் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் இரு முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் மற்றும் அதில் பயணம் செய்த இரு பெண்கள் உட்பட 7 பேர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8)

## நினைவு மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மூத்த ஊடகவியலாளர் பாரதி இராசநாயகம் அவர்களின் ஓராண்டு நினைவு நாளை முன்னிட்டு "பாரதி-ஒரு மனிதநேய ஊடகன்" எனும் நினைவு மலர் வெளியீடானது எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு திருநெல்வேலி இல.37 இராமநாதன் வீதி ஏ-1 ராஜா கிறீம் ஹவுஸ், ஹம்சியா மஹாலில் இடம்பெறவுள்ளது. (3)



கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்பாளின் புகழ்பாடும் "கனகாம்பிகையின் கானங்கள்" எனும் பாடல் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு ஆலய வளாகத்தில், ஆலய பரிபாலன சபையின் தலைவர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் கலந்து கொண்டு குறித்த பாடல் இறுவட்டினை உத்தியோகபூர்வமாக வெளியீடு செய்து வைத்தார்.

## 'பூந்துணர்' இற்கான ஆக்கங்கள் கோரல்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் வருடா வருடம் "பூந்துணர்" என்ற பெயரில் நூல் வெளியீடு செய்யப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இந்த வருடமும் பூந்துணர் நறவம் 13 ஆவது நூல் வெளியிடப்பட உள்ளது.

இந்நூலுக்கு கலை, கல்வி, பாரம்பரியம், மருத்துவம் போன்ற விடயங்களை கருப்பொருளாகக் கொண்டு கதை, கட்டுரை, விமர்சனம், கவிதை, பாடல் என பூநகரி பிரதேச வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டு எழுத்தாளர்கள் ஆர்வமுள்ளவர்களை எதிர்வரும் 31.03.2026 ஆம் திகதிக்கு முன்னராக தங்கள் ஆக்கங்களை கலாசார பிரிவு பிரதேச செயலகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

தகுதியான ஆக்கங்கள் "பூந்துணர் நறவம்" நூல் 13 இல் பிரசுரிக்கப்படும். (8-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கிண்ண ரி-20 தொடரில் தொடரும் பரபரப்பு

# கேள்விக்குறியாகும் இந்தியா-பாகிஸ்தான் மோதல்!



**உலக கிண்ண ரி-20 தொடரில் இந்தியாவுடனான ரி-20 தொடரை பாகிஸ்தான் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

ரி-20 உலகக் கிண்ணத்தில் பெப்ரவரி 15 ஆம் திகதி நடைபெறவுள்ள பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியை அந்நாடு புறக்கணிப்பதாக அறிவித்திருந்தாலும், இந்திய அணி சர்வதேச கிரிக்கெட் பேரவையின் விதிமுறைப்படி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தான் விளையாட வரா விட்டாலும், இந்திய அணி கொழும்பில் உள்ள ஆர். பிரேமதாச மைதானத்திற்குச் சென்று அட்டவணைப்படி பயிற்சிகளை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் போட்டி நாளன்று மைதானத்திற்கு சென்று, போட்டி நடுவர் ஆட்டத்தை ரத்து செய்யும் வரை இந்திய அணி காத்திருக்கும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இதன்படி "இந்திய அணி சர்வதேச கிரிக்கெட் பேரவையின் விதி முறைகளைப் பின்பற்றி திட்டமிட்டபடி மைதானத்திற்கு வரும். பாகிஸ்தான் வரா விட்டால் நடுவரின் முடிவுக்காகக் காத்திருப்போம்," என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தரப்பு தெரிவித்துள்ளது.

முன்னதாக, பாகிஸ்தான் அரசு வெளியிட்ட எக்ஸ் தளப் பதிவில், "பாகிஸ்தான் அணி உலகக் கிண்ணத்தில் பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பெப்ரவரி 15 அன்று இந்தியாவுக்கு எதிரான போட்டியில் மட்டும் அணி களமிறங்காது." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான காரணத்தை பாகிஸ்தான் அரசு வெளியிடவில்லை. பாதுகாப்பு காரணங்களைக் கூறி இந்தியாவில் விளையாட பங்களாதேஷ் மறுத்ததையடுத்து, சர்வதேச கிரிக்கெட் பேரவை அந்த நாட்டை தொடரிலிருந்து நீக்கி, அதற்குப் பதிலாக ஸ்கொட்லாந்து அணியைச் சேர்த்துள்ளது.

பங்களாதேஷின் கோரிக்கையை நிராகரித்த சர்வதேச கிரிக்கெட் பேரவை, அங்கு எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லை என்பதை உறுதிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## கிவுல்...

குறித்த ஆர்ப்பாட்டத்தில் உணர்வெழுச்சியுடன் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டமானது நெடுங்கேணி பேருந்து நிலையம் முன்பாக நேற்று (02) காலை இடம்பெற்றது. குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது கிவுல் ஓயா திட்டத்திற்கு எதிராக மக்கள் கோசங்களை எழுப்பியதுடன், பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.


தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து நெடுங்கேணி பிரதேச செயலகம் வரை ஊர்வலமாக கோசங்களை எழுப்பியவாறு சென்றிருந்தனர். அங்கும் மக்கள் ஒன்று கூடி தமது எதிர்ப்பு போராட்டத்தை நடத்தியதுடன் வவுனியா வடக்கு பிரதேச செயலாளரிடம் மகஜரொன்றையும் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக வழங்கியிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பெருமளவான தமிழ் மக்கள் கலந்து கொண்டு அரசாங்கத்தின் திட்டமிட்ட நில அபகரிப்புக்கு எதிராக குரல் கொடுத்திருந்தனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த தமிழ் தேசியக் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், இரா.சாணக்கியன், து.ரவிகரன், ப.சத்தியலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சுரேஸ் பிறேமச்சந்திரன், மு.சந்திரகுமார், சாந்தி சிறிஸ்கந்தராஜா, தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம், ஜனநாயக போராளிகள் கட்சியின் பேச்சாளர் துளசி, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பல நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றிருந்தனர். *(ம-7,250)*


## மரண அறிவித்தல்

பிறப்பு
26 - 03 - 1973



இறப்பு
02 - 02 - 2026

### கயிலாயபிள்ளை ஜெயராசா

பெரியமாவடி சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கயிலாயபிள்ளை ஜெயராசா அவர்கள் நேற்று (02.02.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கயிலாயபிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் சுயித்தா அவர்களின் அன்புக் கணவரும் பிரித்திகா, பிரவிந், டேதிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற குணம்(வேலணை), றதி(கெற்பேலி) மற்றும் சகோதரர்களான சந்திரன்(சாவகச்சேரி), லீலாவதி(சாவகச்சேரி), காலஞ்சென்ற சறோ(சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலன், செல்வன், கமலா, வதன், கோபி, சுவிந்தா, மாதவன், பவன், ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் தினேஷ், கபில், ஜெனா, வன்னா, நிறஞ்சன், நிரூபன், தயான், நிறோசன், சாந்தன், நோசி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.02.2026) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது மருமகன் சாந்தனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 02.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

076 476 8295,
0777 802 670


தகவல் :
மருமகன் - சாந்தன்

(C-4934)



## மரண அறிவித்தல்

பிறப்பு
20 - 04 - 1951



இறப்பு
02 - 02 - 2026

### சின்னவன் சபாரத்தினம்

(கூட்டுறவுப் பரிசோதகர், சமாதான நீதவான், கலாபூஷணம்)

வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் சபாரத்தினம் (கூட்டுறவுப் பரிசோதகர், சமாதான நீதவான், கலாபூஷணம்) அவர்கள் நேற்று (02.02.2026) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னவன் - சீதேவி தம்பதியரின் மூத்த மகனும் பிறேமாவதி (முன்னாள் முகாமையாளர் - தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் அன்புக் கணவரும் பிரசன்னா (உப அதிபர் - விசுவமடு மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற கவிதாஸ் மற்றும் கோபிதாஸ் (பிரான்ஸ்), புவிதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கவின்சியா, காவியா, கவிநயா, வர்ணியா, டிலுசியா, பிருந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ராணி, குமாரவேலு, அமிர்தலிங்கம், கமலம், உதயா, காலஞ்சென்ற சபாநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நித்தியகுமார், வசந்தா, வனிதா, கண்ணன், நிலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெகந்தன், காத்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2026) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டமுறிச்சான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:
குடும்பத்தினர்

(2013)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமையான சுதந்திரத்தை இன்னமும் அடையவில்லை

## பேராயர் மல்கம் சுட்டிக்காட்டு



**(கொழும்பு) இலங்கை வாழ் மக்கள் முழுமையான சுதந்திரத்தை இன்னமும் அடையவில்லை என கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

இலங்கை மக்கள் முழுமையான சுதந்திரத்தை அடைவதற்கு இன்னும் முயற்சி செய்ய வேண்டிய நிலையில் உள்ளதாகவும், அதற்கு சட்டத்தின் ஆட்சி வலுப்படுத்தப்படுவது அத்தியாவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிட்ட சிறப்பு செய்தியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முழுமையான சுதந்திரத்தை அடைய சட்டத்தின் ஆட்சி இன்றியமையாதது.

சட்டம் சமமாகவும் நீதியுடனும் செயற்படும் சமூகம் தான் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், நாட்டின் தற்போதைய நிலையைப் பார்க்கும்போது, பொருளாதாரம், அரசியல், சமூக மற்றும் பண்பாட்டு துறைகளில் இலங்கை பெரிதளவில் முன்னேற்றம் கண்டுள்ளதாக கூற முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

உண்மையான சுதந்திரம் என்பது வெறும் அரசியல் சுயாட்சி மட்டுமல்ல. அது நீதியும், சமத்துவமும், பொறுப்புணர்வும் நிலவும் சமூக அமைப்பை உருவாக்குவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)

# 'டித்வா' புயலில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சுரக்ஷா காப்புறுதி

(கொழும்பு)

நாட்டின் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு 'சுரக்ஷா' காப்புறுதித் திட்டத்தின் கீழ் நன்மைகளை வழங்குவதற்கு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க, ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட மண் சரிவு, வெள்ளம், சூறாவளி காரணமாகப் பாதிக்கப்பட்ட மாணவர்கள், 2025.11.26 முதல் 2025.12.31வரையான காலப்பகுதியில் எதிர் கொண்ட சம்பவங்களுக்கான இழப்பீட்டு கோரிக்கைகள் மட்டுமே இங்கு பரிசீலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஜனநாயகத்தின் பக்கமே மக்கள் நிற்பார்கள்

## நாமலுக்கு பதிலளித்த பிமல்



(கொழும்பு)

கொலையாளிகளும், திருடர்களும் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏற நாட்டு மக்கள் இடமளிக்க மாட்டார்கள் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச எம்.பி. விடுத்துள்ள எச்சரிக்கை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனிமேல் ஜனநாயகத்தின் பக்கமே மக்கள் நிற்பார்கள் என்றும், மக்களின் விருப்பம் மிக உயர்ந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். மக்கள் அநீதி செய்பவர்களுக்கு ஒருபோதும் இடம் தரமாட்டார்கள்.

நாட்டை அதல பாதாளத்துக்குள் தள்ளியவர்களை மக்கள் மன்னிக்கமாட்டார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3351

### விஸ்னுகா


என் பையன் சொன்னால் சந்தோசப்படுற என் மனைவி அதையே நான் சொன்னால் மட்டும் எறிஞ்சு விழுறாள் அப்படி என்னப்பா சொன்னாய்?



தாயிற் சிறந்த கோவிலுமில்லை என்று தான்

### ரஜீபன்

நாங்கள் எல்லாம் அந்தக் காலத்தில் மூன்றாவது மாடியிலிருந்து அசால்டா கீழே விழுவோம்



நீங்கள் என்னடா என்றால் கட்டிலிலே இருந்து கீழே விழுந்ததுக்கே மூஞ்சியே பேத்துகிறீங்கள்

### சாய்சங்கவி



என்னை ஒதுக்கிய பாவத்திற்கு பரிகாரம்...
1.பெற்றோல் விலை உயர்வு
2. இன்சூரன்ஸ் உயர்வு
3. ஆரோக்கியம் குறைவு
இப்படிக்கு மிதிவண்டி

### செவ்வந்தி

'போதையில் பயணம் பாதையில் மரணம்' என்று பைக்கில் எழுதி வைச்சிருக்கான்



ஆனால் பைக் டாஸ்மாக் வாசலிலே நிற்கிறது. என்னத்த சொல்ல...

### மதுஷா

செத்த பின்ன 'சாம்பலா' போறது பெரிய விசயமில்ல..

வாழும் போதே மத்தவங்களுக்கு Ex'சாம்பலா' இருந்துட்டு போகனும் அதான் வாழ்க்கை...



### ரிஷிகேதன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத தொழிலில் ஈடுபடும் சிறுவர்கள்

## தொழில் அமைச்சு தகவல்

**(கொழும்பு) ____________________**

**18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் சட்டவிரோத தொழிலில் ஈடுபடுவதும், அதை மறைப்பதற்காக பாடசாலைச் சீருடை அணிவதும் கண்டறியப் பட்டுள்ளதாக, தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.**

ஆங்கில ஊடகம் ஒன்று க்கு, வழங்கிய செவ்வியில் தொழில் அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.பியதிஸ்ஸ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கடுமையான பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கும் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் வருமானம் ஈட்டும் செயல்களில் ஈடுபட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த சிறுவர்கள் பாட சாலைக் கல்வியை நிறைவு செய்து வீடு திரும்பும் தோற்றத்தை ஏற்படுத்துவதற்காக, பாடசாலை சீருடையை அணிந்து பல்வேறு வருமான மீட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சம்பவங்கள் கண்டறியப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடன் இணைந்து, சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் தொழில் அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (நி)


## திருமலை புத்தர் சிலை விவகாரம் விளக்கமறியல் நீடிப்பு

(திருமலை)

திருகோணமலை கடற்கரையில் புத்தர் சிலையை வைத்த விவகாரம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள 4 பௌத்தபிக்குகள் உட்பட 10 பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக் கப்பட்டுள்ளது.

திருகோணமலை நீதிவான் நீதிமன்ற பிரதான நீதிவான் எம்.எஸ். எம்.சம்சுதீன் இந்த உத்தரவை நேற்று திங்கட்கிழமை வழங்கினார்.. (நி)

## முழுமையான மாதமாக அடையாளப்படுத்தப்பட்ட பெப்ரவரி




(கொழும்பு) 2026 பெப்ரவரி மாதம் ஒரு தனித்துவமான நாட்காட்டி அமைப்பைக் கொண்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை தொடங்கி சனிக்கிழமையுடன் முடிவடையும் நான்கு வாரங்களை (28 நாட்கள்) கொண்ட இந்த மாதம் ஒரு "முழுமையான மாதம்" என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக இத்தகைய தனித்துவமான பெப்ரவரி மாதம் 2015 ஆம் ஆண்டில் அமைந்திருந்தது.

2015 இற்குப் பின்னர் தற்போது ஏற்பட்டுள்ள இந்த அரிய நிகழ்வு, மீண்டும் 11 ஆண்டுகளுக்குப் பின்னர் 2037 ஆம் ஆண்டில் நிகழும்.

இந்த பெப்ரவரி மாதத்தில் வாரத்தின் ஒவ்வொரு நாட்களும் (திங்கள் முதல் ஞாயிறு வரை) சரியாக நான்கு முறை வருவது குறிப்பிடத்தக்கது. லீப் வருடம் அல்லாத ஒரு வருடத்தில், பெப்ரவரி மாதம் ஞாயிற்றுக்கிழமையில் தொடங்கும் போது நாட்காட்டியில் இந்த தனித்துவமான அமைப்பு உருவாகிறது. இந்த மாதம் நாட்காட்டியில் மிகவும் நேர்த்தியாகக் காணப்படுவதால், பலரும் இதனை "செவ்வக மாதம்" என்றும் அழைக்கின்றனர். (நி)

# நடந்துசென்ற சிறுவர்களை மோதித் தள்ளிய பாரவூர்தி

## 13 வயதுச் சிறுவன் பலி



(சிலாபம்)

சிலாபம் - குருநாகல் வீதியின் மேல் கொஸ்வத்த பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 13 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பிங்கிரிய பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

நேற்று முன்தினம் பிற் பகல் சிலாபம் நோக்கிச் சென்ற பாரவூர்தி ஒன்று, வீதியோரத்தில் நடந்து சென்ற இரண்டு சிறுவர்கள் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இரண்டு சிறுவர்களும் உடனடியாக சிலாபம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர், சிகிச்சை பெற்று வந்த சிறுவர்களில் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஹல் மில்லேவ பகுதியைச் சேர்ந்த 13 வயது சிறுவன் ஆவார்.

விபத்தில் காயமடைந்த மற்ற சிறுவர் தற்போது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 450 | 300 | 400 | 500 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 150 | 180 | 380 | 375 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 500 | 600 | 500 | 700 |
| தக்காளி | 300 | 250 | 600 | 300 | 400 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 150 | 180 | 120 |
| கோவா | 300 | 250 | 300 | 300 | 250 | 220 |
| கரட் | 400 | 500 | 400 | 500 | 400 | 400 |
| பூசணி | 100 | 140 | 120 | 140 | 150 | 80 |
| புடோல் | 300 | 200 | 300 | 300 | 200 | 200 |
| வாழைக்காய் | 160 | 200 | 150 | 250 | 160 | 180 |
| சின்ன வெங்காயம் | 300 | 260 | 300 | 300 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 220 | 200 | 200 | 250 | -- |
| பாகற்காய் | 600 | 600 | 700 | 600 | 500 | 450 |
| வெண்டக்காய் | 400 | 400 | 300 | 400 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 300 | 400 | -- | 200 |
| பயற்றங்காய் | 800 | 400 | 800 | 600 | 600 | 350 |
| லீக்ஸ் | 450 | 450 | 300 | 500 | 300 | 380 |
| பீற்றூட் | 300 | 350 | 600 | 400 | 300 | 400 |
| கறிமிளகாய் | 900 | 700 | 600 | 1000 | 700 | 900 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 300 | 300 | 600 | 300 | 450 | 200 |
| கத்தரிதம்புள்ள | 500 | 300 | 300 | 450 | -- | -- |
| கீரை - 1 பிடி | 120 | 40-120 | 150 | 100 | -- | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 200 | 150 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 180 | 150 | 120-160 | -- | 115 |
| இராசவள்ளி | 600 | 500 | 400 | 450 | -- | 400 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 400 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 200 | 150 | 130 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 60 | 50 | 100 | 80 | -- | 80 |
| [illegible] | 100 | -- | 100 | 200 | -- | 90 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A.T.M பயன்படுத்தும் போது அவதானத்துடன் செயற்படுங்கள்!

## பொது மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

ஏ.ரி.எம் இயந்திரங்களை பயன் படுத்தும் போது பொது மக்கள் அவ தானமாகச் செயற்படுமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்து ள்ளனர்.

மோசடிகளிலிருந்து தப்பிக்க, முன்பின் தெரியாதவர்களின் உதவி யைப் பெறுவதைத் தவிர்க்குமாறு பொலிஸார் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வங்கிகளுக்கு அருகில் நின்று கொண்டு, ATM இயந்திரங்களில் பணம் எடுக்க வரும் முதியவர்களுக்கு உத வுவது போல் நடித்து, அவர்களின் வங்கி அட்டைகளைத் திருடி வந்த நபர் ஒருவரை தெற்கு களுத்துறை பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 11 வங்கி அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கைது செய் யப்பட்டவர் பொலநறுவை பகுதியைச் சேர்ந்த 42 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். தெற்கு களுத்துறை பொலிஸ் குற்றப்புல னாய்வுப் பிரிவு அதிகாரிகள் கடமை நிமித்தம் அரச வங்கி ஒன்றிற்கு சென்றி ருந்தபோது இந்த மோசடி கண்டுபிடிக் கப்பட்டுள்ளது.

இதன்போது உடனடியாகச் செயற்பட்ட பொலிஸ் அதிகாரிகள், வங்கிக்கு அருகிலேயே நடமாடிக் கொண்டிருந்த சந்தேகநபரை சுற்றி வளைத்து கைது செய்து, களுத்துறை நீதவான் நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த நபருக்கு எதிராக போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஏனைய குற்றங்கள் தொடர்பாக பொலநறுவை மற்றும் வெள்ளவத்தை உள்ளிட்ட பல நீதிமன்றங்களில் ஏற் கனவே பல வழக்குகள் நிலுவையில் உள்ளமை தெரியவந்துள்ளது. (நி)

# உச்சம் தொட்ட இஞ்சி விலை

(கொழும்பு)

உள்ளூர் சந்தையில் இஞ்சி ஒரு கிலோவின் விலை 2,000 ரூபாய் வரை சடுதியாக அதிகரித்துள்ளது.

ஹட்டன் பிரதேச மரக்கறி வியா பாரிகள் இந்த விலை யேற்றம் குறித்துத் தகவல்களை வெளியிட்டு ள்ளனர்.

வழமையாக ஒரு கிலோ 300 முதல் 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட இஞ்சியானது, தற் போது 1,500 முதல் 2,000 ரூபாய் வரையான அதிக விலைக்கு விற் பனை செய்யப்படுவதாக வியாபாரி கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

டித்வா புயலினால் இஞ்சிச் செய் கைகள் அழிவடைந்ததன் காரண மாக, உள்ளூர் சந்தையில் பச்சை இஞ்சிக்கு பாரிய தட்டுப்பாடு நிலவு கின்றமையே இந்த விலை யேற் றத்திற்கு முக்கிய காரணமாகும்.

சந்தையில் ஏற்பட்டுள்ள இத் தட்டுப்பாடு காரணமாக நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பௌத்தத்தை அவமதிப்பதாகக்கூறி திருமலை நீதிமன்றம் முன் ஆர்ப்பாட்டம்

## ஆர்ப்பாட்டக்காரரை விரட்டியடித்த மக்கள்



(திருமலை)

திருகோணமலை நீதவான் நீதி மன்றத்தை அண்மித்த பகுதியில் அரசாங்கத்திற்கு எதிரான வாச கங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு சிலர் நேற்று ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை பிரதான கடற் கரை சர்ச்சைக்குரிய கட்டுமானம் மற்றும் புத்தர்சிலை தொடர்பான வழக்கு நேற்று இடம்பெற்றுக் கொண் டிருந்தபோது இவர்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுஜன அரகலய குடிமக்கள் கூட்டமைப்பு என்ற அமைப்பின் செயலாளர் சானக்க பண்டார மற்றும் சிங்கள பௌத்த ஐக்கியம் அமைப் பின் செயலாளர் லங்கா தரங்க ஆகியோரே இவ்வாறு ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய மக்கள் சக்தி தலைமை யிலான அரசாங்கம் பௌத்த சம யத்தை அவமரியாதைக்கு உட் படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கூறியே இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் குழப்பங்களை ஏற்ப டுத்த வேண்டாம் என குறித்த நபர்களை அங்கிருந்து விரட்டி யடித்தனர். (நி)

# சஜித் மறுத்தால் நாமலுடன் கூட்டணி- ரணில் திட்டவட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் நடை பெற்று வரும் பேச்சுவார்த்தைகள் தோல் விய டைந்தால்,ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜ பக்சவுடன் கூட்டணி அமைக்க ஐக்கிய தேசியக் கட்சி எத்தனித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சமீபத்திய நாட்களில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் நாமல் ராஜபக்ஷ நடத்திய கலந்துரை யாடல்கள் தொடர்பான தகவல்களும் வெளியாகி வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளை இணைப் பதற்கான முயற் சிகள் இன்னும் வெற்றி பெறவில்லை என்று அக்கட்சியின் செயற் பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களின் போதும் இதே போன்ற திட்டங்கள் முன்வைக்கப்பட் டாலும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலை மையின் அலட்சிய அணுகுமுறையால் அவை தோல்வியடைந்தன.

தற்போதைய சூழ்நிலையில் ஒன்று படாவிட்டால், தேர்தல் வெற்றிகள் கடின மாக இருக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தொகுதி அமைப்பாளர்கள் தங்கள் தலை மைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு, ஐக்கிய மக்கள் சக்திக்கு ஒரு முன் மொழிவை சமர்ப் பித்திருந்தாலும், அதற்கு இன்னும் சரியான பதில் கிடைக்க வில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரு கட்சியாக அதி கார பூர்வமாக பேச்சுவார்த்தை நடத்துவதற் குப் பதிலாக, தனித்தனி யாகக் கையாள் வதற்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையின் முயற்சி, கூட்டணியை உருவாக்கு வதற்கு ஒரு தடையாக இருப்ப தாக கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். (நி)


31 ஆம் நாள்

நினைவஞ்சலி



வலி கிழக்கு, கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் உறுப்பினரான திருமதி.விக்னேஸ்வரராசா பவானி அவர்களின் தாயார்

அமரர். மீனலோஜினி அருணகிரி

அவர்களின் 31 ஆம் நாள் நினைவாக, அவரது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

மத்தியஸ்த சபை
வலிகாமம் கிழக்கு, கோப்பாய்

(C-4928)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 17.03.1983
உதிர்வு 27.01.2024

அமரர்.திருமதி. சுஜந்தினி சிவக்குமார்

திதி 03.02.2026

வேர் போல நானும் நீர்போல நீயும்
நீர் ஓடிப் போனால் வேர் வாடிப் போகும்.

எங்கள் அன்புத் தெய்வமே
எத்தனை ஆண்டுகள் புவி சுழன்றாலும்
உங்கள் நினைவுகள்
எம் மனதில் சுழன்று கொண்டேயிருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
சந்நிதி முருகனை வேண்டி நிற்கின்றோம்.

(2010)

சுஜந்தினி வாசா
கற்கோவளம், பருத்தித்துறை
தொ.பே.இல 077 108 6590

அன்புக் கணவர்
பாசமிகு மகன் ஹரிசயன்
பாசமிகு மகள் ஹரினிகா
மற்றும் உறவினர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உக்ரைனில் பேருந்து மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல்

### 15 பேர் உயிரிழப்பு



(கீவ்)

உக்ரைனின் தென் கிழக்குப் பகுதியில் உள்ள ட்னிப்ரோபெட்ரோவ்ஸ்க் மாகாணத்தில் ரஷ்யா மேற்கொண்ட ட்ரோன் தாக்குதலில் சுமார் 15 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளதாகவும் 8 பேர் காயமடைந்துள்ள தாகவும் வெளிநாட்டு ஊட கங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

வேலை முடிந்த பின்னர் சுரங்கத் தொழிலாளர் களை ஏற்றிச் சென்ற பேரு ந்தை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக உக்ரைனின் மிகப்பெரிய தனியார் மின்சார நிறு வனம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் பாவ் லோஹ்ராட் மாவட்டத்தில் இடம்பெற்றதாக அப்பகுதி ஆளுநர் ஒலெக்சாண்டர் கண்ஷா உறுதிப்படுத்தி யுள்ளார்.


ட்ரோன் தாக்குதலால் பேருந்தில் தீப்பற்றியதா கவும், பின்னர் அவசர சேவைகளால் தீ அணை க்கப்பட்டதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதனை உக்ரைன் எரி சக்தி அமைச்சர் டெனிஸ் ஷ்மிஹால், இது எரிசக்தித் துறை ஊழியர்களை திட்ட மிட்டு குறிவைத்த "மனித நேயமற்ற தாக்குதல்" என கடுமையாக கண்டித்துள் ளார்.

முன்னதாக தென் கிழக்கு உக்ரைனின் சபொரிஜ்ஜியா நகரில் உள்ள மகப்பேறு மருத் துவமனை மீது நடந்த தாக்குதலிலும் பலர் காய மடைந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (3)

## அமெரிக்கா போர்...
## அது பிராந்தியப் ...
### — ஈரான் உச்ச தலை...

(டெஹ்ரான்) - அமெரிக... தாக்கினால், மத்திய கிழக்... என்று ஈரானி... அயதுல்லா அ... விடுத்துள்ளார்.



அமெரிக்கர்கள் ஒரு போரைத் தொடங்கினால், இந்த முறை அது ஒரு பிராந்தியப் போராக இருக் கும் என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண் டும்," என்று அயதுல்லா கூறியதாக அந்நாட்டு ஊட கங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

மேலும், "நாங்கள் தூண்டுபவர்கள் அல்ல, எந்த நாட்டின் மீதும் தாக்குதல் நடத்த நாங்கள் விரும்பவில்லை.

ஆனால் ஈரான் தேசத் தைத் தாக்கும் அல்லது துன்புறுத்தும் எவருக்கும் ஈரானிய தேசம் தகுந்த பதிலடி கொடுக்கும்.

சமீபத்திய கிளர்ச்சி ஒரு இராணுவப் புரட்சியைப் போன்றது. நிச்சயமாக, அந்தப் புரட்சி ஒடுக்கப்படும்." எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தனது கடற் படையை ஈரான் அருகே அனுப்பியுள்ள நிலையில் கமேனி இந்த எச்சரிக் கையை விடுத்துள்ளார்.

ஒருபுறம் போர்ப் பதற றம் நிலவினாலும், மோதலைத் தவிர்க்க இரு நாடுகளும் தீவி ரமாகப் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

இ... பேச்... னேற்... இதற்... செய்... ஈரான... அலி... ளார்.

## உலகின் உயரிய இசை விருதினை 90ஆவது வயதில் வென்ற தலாய் லாமா



(வோஷிங்டன்)

திபெத்திய ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா, தனது 90ஆவது வயதில் முதல்முறையாக "கிராமி" விருதை வென்று வரலாற் றுச் சாதனை படைத்துள் ளார்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 68 ஆவது கிராமி விருது வழங்கும் விழாவில் அவர் இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

உலகின் உயரிய இசை விருதாகக் கருதப்படும் "கிராமி" விருதினைத் திபெத்திய ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா முதல் முறையாக வென்றுள் ளார்.

தலாய் லாமாவின் "Meditations: The Reflections Of His Holiness The Dalai Lama" என்ற ஆல் பத்திற்காக, "சிறந்த ஒலி புத்தகம், கதை சொல்லல் மற்றும் விவரிப்பு" பிரிவில் இந்த விருது வழங்கப் பட்டது.

இந்தத் துறையில் தலாய் லாமாவுடன் பல பிரபலங்கள் போட்டியிட் டனர்.


குறிப்பாக கிராமி விருது விழாவைத் தொகுத்து வழங்கிய நகைச்சுவை நடிகர் ட்ரெவர் நோவா, அமெரிக்க உச்ச நீதிமன்ற நீதியரசர் கெட்டன்ஜி பிரவுன் ஜாக்சன், மில்லி வெனில்லியின் ஃபாப் மோர்வன் ஆகிய அனை வரையும் பின்னுக்குத் தள்ளி தலாய் லாமா இந்த விருதினைத் தட்டிச் சென் றார்.

இந்த ஆல்பம் வெறு மனே பேசும் ஒலி புத்தகம் மட்டுமல்ல, இதில் இந்தியச் செவ்வியல் இசை மற்றும் தியானம் தொடர்பான கருத்துக்கள் ஒன்றிணை க்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் பிரபல சரோத் இசைக் கலைஞர் அம்ஜத் அலி கான் மற்றும் அவரது மகன்கள் அமன் அலி பங்காஷ், அயன் அலி பங்காஷ் ஆகி யோரின் இசைப் பங்க ளிப்பு இதில் முக்கியமா னது.

மன அமைதி, நல் லிணக்கம், ஆரோக்கியம் மற்றும் உலகளாவிய அன்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டு இது உருவாக்கப்பட்டுள் ளது.

ரூஃபஸ் வைன்ரைட், மேகி ரோஜர்ஸ் மற்றும் ஆன்ட்ரா டே போன்ற சர்வதேசக் கலைஞர் களும் இதில் பங்கேற்றுள் ளனர். (3)



'ஏ... ஜ...

ஜ...

(பே... ஜப்... மாதம்... நிலை... செயற... பத்தை... காலெ... ஏற்பு... இத... குழுப்... தேர்... விடுத்... ஆம்... நடை... வெ... ஆட்சி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு


# ர் தொடங்கினால்

# போராக மாறும்!

## லவர் எச்சரிக்கை

)

**க்கப் படைகள் ஈரானை , அதன் விளைவுகள் க்கு முழுவதும் பரவும் னின் உச்ச தலைவர் அலி கமேனி எச்சரிக்கை ர்.**



இந்த நிலையில் இரகசிய ச்சுவார்த்தைகள் முன் ற்றம் கண்டுள்ளதாகவும், ற்கான கட்டமைப்பு தயார் ய்யப்பட்டு வருவதாகவும் ானின் பாதுகாப்பு அதிகாரி சிலாரிஜானி தெரிவித்துள் ர். (3)

## வெனிசுலாவுக்கு பயணமானார் அமெரிக்க தூதுவர் லாரா டோகு



(கராகஸ்)

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை அமெரிக்க இராணுவம் கைது செய்து அழைத்துச் சென்றது.

இதையடுத்து அங்கு இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட டெல்சி ரோட்ரிக்ஸ் அரசாங்கம் அமெரிக்காவுடன் இணக்கமாக உள்ளது.

இந்நிலையில் வெனிசுவேலாவில் ஏழு ஆண்டுகளுக்கு பின்னர் அமெரிக்க தூதரகம் திறக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அமெரிக்கத் தூதுவர் லாரா டோகு வெனிசுலாவுக்கு சென்றார்.

அவர் வெனிசுலாவில் அமெரிக்க தூதரகத்தை திறப்பதற்காக அங்கு சென்றடைந்தார்.

இதுதொடர்பாக அவர் எக்ஸ் வலைத்தளப் பக்கத்தில், நானும் எனது குழுவும் பணியாற்றத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்தார்.

கடந்த 2019ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமெரிக்காவும் வெனிசுலாவும் தூதரக உறவுகளைத் துண்டித்து, தங்கள் தூதரகங்களை மூடின என்பது குறிப்பிடத்தக்கது. (3)





## ஏஐ' காணொளிகளால் திணறும் ஜப்பான் வாக்காளர்கள்

### ஜனநாயகத்திற்குப் புதிய சவால்

(டோக்கியோ)

ஜப்பான் பாராளுமன்றத்திற்கு இம் தம் பொதுத்தேர்தல் நடைபெற உள்ள லையில், அங்குள்ள அரசியல் கட்சிகள் யற்கை நுண்ணறிவு தொழில்நுட் தைப் பயன்படுத்தி வெளியிடும் போலி ணொளிகள் பெரும் சர்ச்சையை படுத்தியுள்ளன.

இது வாக்காளர்கள் மத்தியில் கடும் ழப்பத்தை ஏற்படுத்தி வருவதாகத் ர்தல் நிபுணர்கள் எச்சரிக்கை டுத்துள்ளனர். ஜப்பானில் எதிர்வரும் 8 ம் திகதி பாராளுமன்றத் தேர்தல் டைபெறவுள்ளது.

மொத்தம் உள்ள 465 இடங்களில், ட்சியைப் பிடிக்க 233 இடங்களைக் கைப்பற்ற வேண்டும்.

ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள சூழலில், இந்தப் புதிய “டிஜிற்றல் போர்” கவலையை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது ஜப்பானிய வாக்காளர்களைக் குறிவைத்து சமூக வலைத்தளங்களில் செயற்கை நுண்ணறிவு காணொளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

தாய்வான் விவகாரம் தொடர்பாக பிரதமர் சனே தகாய்ச்சி ஆற்றிய உரையை அடிப்படையாகக் கொண்டு, அவருக்கு ஆதரவாக ஒரு முதியவர் பேசுவது போன்ற 15 வினாடி ஏஐ காணொளி வைரலாகி வருகிறது.

30 இலட்சத்திற்கும் அதிகமானோர் பார்த்த இந்த காணொளி, உண்மையில் ஒரு ஏஐ தயாரிப்பு என்பது பலருக்குத் தெரியவில்லை.

செய்தி நிறுவனங்களின் விவாதங்கள் மற்றும் தெருக்களில் பொதுமக்கள் பங்கேற்கும் கருத்துக் கணிப்புகள் போன்ற தோற்றத்தில் ஏஐ காணொளிகள் உருவாக்கப்படுகின்றன.

இது குறித்து ஜப்பானின் [illegible] பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் சுகாசா தனிஹாரா கூறுகையில், இத்தகைய காணொளிகள் ஒரு குறிப்பிட்ட கருத்துக்கு மக்களிடையே பெரும் ஆதரவு இருப்பது போன்ற மாயத் தோற்றத்தை உருவாக்குகின்றன.

பின்னணியில் வரைபடங்கள் மற்றும் தரவுகளைச் சேர்த்து இவை தயாரிக்கப்படுவதால், மக்கள் எளிதில் நம்பி விடுகின்றனர். இதுவொரு மோசடிச் செயல், என வேதனை தெரிவித்துள்ளார்.

ஜப்பான் வாக்காளர்கள் எவை உண்மையான பிரச்சார காணொளிகள் என்று தெரியாமல் குழப்பத்தில் உள்ள நிலையில், தேர்தல் களம் மேலும் சூடுபிடித்துள்ளது. (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூசத் திருநாள் சிறப்பு வழிபாடுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. அன்றைய தினம் மாலை விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று, வள்ளி தெய்வானை சமேதரராய் முருகப்பெருமான் திருமஞ்சத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சியளித்தார்.

(படம் - சிவசாந்தன்)

# போதைப்பொருள் சாரதிகளை இனங்காண வீதிச்சோதனை

(தருமபுரம்)

கிளிநொச்சியில் போதைப்பொருள் பயன்படுத்தி வாகனம் செலுத்தும் சாரதி களை இனங்காண வீதிச் சோதனையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏ35 பிரதான வீதியில் போதைப்பொருள் பயன்படுத்தி வாகனம் செலுத்துவோர் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கட்டுப் படுத்தும் நோக்கில் வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

தருமபுரம் பொலிஸார் மற்றும் விமானப்படையினர் இணைந்து குறித்த சோதனை நடவடிக்கையை மேற் கொண்டிருந்தனர். (8-316)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1999-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா-10 3/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, Banker
எதிர்பார்ப்பு: Teacher. அரசதொழில்
தொ.இ: B/15602

பிறப்பு:1992-இந்து
நட்சத்திரம்:பூசம்
கி-பா-30
உயரம்:5'7"
தகைமை/தொழில்-CIMA, Accoutant (pvt)
எதிர்பார்ப்பு: IT Field
தொ.இ: B/15603

பிறப்பு:1985-இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
கி.பா: 13
உயரம்:5'7"
தகைமை/தொழில்: Diploma in construction Technology, TO
எதிர்பார்ப்பு: பட்டதாரி. அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/14627

பிறப்பு: 1989-இந்து
நட்சத்திரம்:விசாகம்
12இல் செவ்
கி-பா-36
உயரம்:5'6"
தகைமை/தொழில்: O/L. விற்பனை உதவியாளர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15607

பிறப்பு: 1979- இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
கி-பா- 13 1/2
உயரம்:5'8"
தகைமை/தொழில்: A/L.கமம்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண். விவாகரத்தானவர்
தொ.இ: B/15608

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1999-இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி.பா: 16
உயரம்:5'
தகைமை/தொழில்: BFA (Music)
எதிர்பார்ப்பு: Banker, IT field, Accountant
தொ.இ: G/14638

பிறப்பு-1995-RC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BFA, Teacher
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15604

பிறப்பு-1991-RC
நட்சத்திரம்-சித்திரை
உயரம்-5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15606

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
கி.பா -24
உயரம்: 5'5"
தகைமை/தொழில் - BSc, Software Engineer
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15612

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா - 16
உயரம்: 5'6"
தகைமை/தொழில் - A/L
எதிர்பார்ப்பு: உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/15618

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 535



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# போட்டியும் போதை மருந்தும்!

ஒரு விளையாட்டுப் போட்டி நடந்துகொண்டிருந்தது. மைதானத்திலே எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்! ஓடும் அத்தனை பேரும் முதலில் வர வேண்டும். பரிசு வாங்க வேண்டும் என்று தான் ஆசைப்படுவார்கள், அப்படி ஆசைப்படுவதிலே ஒன்றும் தவறில்லை. ஆனால் குறுக்கு வழியிலே ஓடி அப்படி முதலிலே வந்துவிட வேண்டும் என்று நினைப்பது தவறு தானே! சிலபேர் குறுக்கு வழியைக் கடைபிடித்து அப்படி முதலிலே வந்துவிட வேண்டும் என்று முயற்சி செய்கிறார்கள். அது தவறு மட்டும் இல்லை. சட்டவிரோதமும் கூட!

1960களில் ரோமாபுரியிலே நடந்த ஒலிம்பிக்கிலே மிதிவண்டி ஓடுகின்ற இளம் வீரர் ஒருவர். போட்டி சமயத்திலே எந்தக் காரணமும் இல்லாமல் திடீர் என்று இறந்து போனார். ஏன்? இப்படி ஆனது என்று யாருக்கும் புரியவில்லை! அதன்பின் அதைப் பற்றி தீவிரமாக ஆராய்து பார்த்தபோது போதை மருந்து உண்டதினாலே தான் அப்படி ஆனது என்று கண்டுபிடித்தார்கள்! அதன்பின் விளையாட்டு வீரர்கள் போதை மருந்து சாப்பிடுவதைக் கண்டுபிடிப்பதற்கு ஆய்வுக்குழு ஒன்றை ஏற்படுத்த ஆரம்பித்து விட்டார்கள்.

1976களில் கனடா நாட்டிலே நடந்த மாண்டரியல் ஒலிம்பிக்கில்தான் முதல் தடவையாக இந்த ஆய்வுக்குழு ஏற்படுத்தப்பட்டது. இருந்தாலும் இந்தப் போதை மருந்து விவகாரம் ரொம்ப பிரபலமானது சமீபத்திலே தான்! அதுவும் பென் ஜான்சனாலேதான். சரி! இந்தப் போதை மருந்தை எப்படி உட்கொள்கிறார்கள் தெரியுமா? வாய் மூலமாக சாப்பிட்டுவிடுவது, மூக்கினாலே நுகர்வது, ஊசி மூலமாக உடலிலே ஏற்றிக்கொள்வது. இப்படி பல வழிகள்!

வேகமாக ஓடுவதற்கும், குண்டு எறிவதற்கும், பளு தூக்குவதற்கும், நீளம் தாண்டுவதற்கும், உயரம் தாண்டுவதற்கும் இதுமாதிரி போட்டிகளிலே கலந்து கொள்பவர்கள் அவர்களுடைய தசை நார்கள் பெரிதாவதற்காக அனபாலிக்ஸ்டிராய்ட் மருந்தை உபயோகப்படுத்துகிறார்கள்! இன்னொரு வகை போதை மருந்து உண்டு. அது கஞ்சா வகையைச் சேர்ந்தது. ரொம்ப தூரம் ஓட வேண்டியவர்கள் இதை உபயோகப்படுத்துகிறார்கள். ஒரு குறிப்பிட்ட அளவு தூரம் நன்றாக ஓடி அதன்பின் ஓடமுடியாது என்கின்ற நினைப்பு வரும்போது இது அதையும் மீறி இயந்திரம்போல ஓட வைத்துவிடும்!

துப்பாக்கி சுடுபவர்கள், அம்பு விடுகின்றவர்கள் இவர்களுக்கு டென்ஷனிலே கை நடுங்கும், இதயம் பட படக்கும். இதற்கு "பிளாக்கர்" என்ற இதயநோய் மருந்தை உபயோகப் படுத்துகிறார்கள்! குத்துச்சண்டை வீரர்கள், மல்யுத்த வீரர்கள் இவர்கள் எல்லாம் எடையைக் குறைப்பதற்கு "லேசிக்ஸ்" என்கின்ற மருந்தை உபயோகப்படுத்துகிறார்கள்! (சிறுநீர் அதிகம் கழிக்க பயன்படும் மருந்து இது!) வீராங்கனைகள் இந்த அன்பாலிக்ஸ்டிராய்டு உட்கொள்வதனாலே அவர்களுடைய தசை நார்கள் ஆண்கள் மாதிரி மாறிவிடும்! இப்படியெல்லாம் இருந்தும்கூட இதனாலே ஏற்படுகின்ற பாதிப்புக்கள் அதிகம். உடம்பு மோசமாகிவிடும். பெண்களுக்கு ஆண்கள் மாதிரி குரல் மாறும், முகத்திலே முடி முளைக்க ஆரம்பிக்கும், தலைமுடி உதிரும், கர்ப்பப்பையிலே புற்றுநோய் உண்டாகும். ஆண்களாக இருந்தால் அவர்களுக்கு ஒரு மிருகவெறி உண்டாகிவிடும். நுரையீரல் புற்றுநோய் வரும், இதயநோய் வரும், இரத்தக் கொதிப்பு ஏற்படும், தலைமுடி உதிரும் இப்படி போதை மருந்து சாப்பிடுபவர்கள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் அவர்களுக்கு ஏகப்பட்ட தொந்தரவு வரும்!" அதனாலே பரிசு வாங்க வேண்டும் என்ற ஆசையிலே பாதை மாறிப் போகிறது ரொம்பத் தவறு. இப்போது எல்லாம் ஒலிம்பிக்கிலே இறுதிப் போட்டியில் கலந்து கொள்பவர்களைப் பரிசோதனை செய்து பார்த்து விடுகிறார்கள்.

ஒரு ஓட்டப் பந்தயம் நடந்துகொண்டிருந்தது. நிறைய பேர் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் பிரபலமான விளையாட்டு வீரர்கள். அதிலே ஒரு வீரன் மட்டும் முதலிலே ஓடிக்கொண்டிருந்தான். மற்றவர்கள் எல்லாம் ரொம்பப் பின்தங்கி ஓடிவந்துகொண்டிருந்தார்கள்.

முன்பு ஓடிக்கொண்டிருந்த அந்த வீரன் லேசாக திரும்பிப் பார்த்தான். எல்லோரும் ரொம்பவும் பின்னால் வந்துகொண்டிருந்தார்கள். அதிலேயிருந்து ஒருவன் மட்டும் வீர் என்று முன்னேறி முதலிலே ஓடிக்கொண்டிருந்தவனை நெருங்கி வந்துவிட்டான். அவனுக்கு சந்தேகம். பின்னாடி வந்தவன் போதை மருந்து சாப்பிட்டிருப்பான் - அதுதான் இப்படி அம்பு மாதிரி வருகிறான் என்று நினைத்தான்! அதனாலே ஓடிக்கொண்டே பக்கத்திலே திரும்பி அவனிடம் கேட்டான். ஏன்- இவ்வளவு வேகமாக வருகிறீயே அது எப்படி? என்றான். அவனும் ஓடிவந்துகொண்டே, சார் அதற்குக் காரணம் நீங்கள் தான்! என்றான். எப்படி? என்றான் அவன்.

அதற்கு இவன், சார் - நான் போட்டியிலே சேர்ந்தவன் இல்லை கொஞ்ச நேரத்திற்கு முன்பு ஆட்டோகிராப் வாங்கினேன். என் பேனாவை வாங்கி கையெழுத்துப் போட்டீர்கள் போட்டுவிட்டு பேனாவை என்னிடம் திருப்பிக் கொடுக்காமல் உங்கள் கையிலே எடுத்துக்கொண்டு ஓடிவந்து விட்டீர்கள். அதை வாங்கிக்கொண்டு போவதற்குத்தான் உங்களை துரத்தி வந்துகொண்டிருக்கிறேன்! என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 18)

# இல்லம் சிறக்க வர்ணப் பூச்சு

IESL VC



Dream House

**அறிமுகம்**

ஒரு மனிதனின் கனவு இல்லம் நனவாகும் போது, அதற்கு உயிர் கொடுப்பது வர்ணங்கள் தான். வர்ணம் பூசுவது என்பது வெறும் அழகுக்காக மட்டுமின்றி, சுவர்களின் ஆயுளை நீட்டிக்கவும், வீட்டில் வசிப்பவர்களின் மனநிலையை மேம்படுத்தவும் செய்யப்படுகிறது. சரியான திட்டமிடல் இன்றி வர்ணம் பூசினால், அது பண விரயத்திற்கும் மன உளைச்சலுக்கும் வழி வகுக்கும்.

**1.வர்ணம் பூசும் வகைகள்**

சுவர்களின் பயன்பாடு மற்றும் இடத்தைப் பொறுத்து வர்ணங்கள் பல வகைப்படும்:

❖ டிஸ்டெம்பர் (Distemper): இது மிகவும் சிக்கனமானது. உட்புறச் சுவர்களுக்குப் பயன்படுத்தலாம். ஆனால் இதைத் தண்ணீரால் துடைக்க முடியாது.

❖எமல்ஷன் (Emulsion): இது இன்று பரவலாகப் பயன்படுத்தப்படும் நீர் சார்ந்த பெயிண்ட் ஆகும். இது நீண்டகாலம் உழைக்கும், அழுக்கானால் ஈரத்துணியால் துடைக்கும் வசதி கொண்டது.

❖ எனாமல் பெயிண்ட் (Enamel Paint): மரச்சாமான்கள், ஜன்னல் கம்பிகள் மற்றும் கதவுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இது பளபளப்பையும் கடினமான பாதுகாப்பு அடுக்கையும் தரும்.

❖ ரெக்ஸ்சர் பெயிண்ட் (Texture Paint): வீட்டின் வரவேற்பு அறையில் ஒரு சுவரை மட்டும் தனித்துவமாகக் காட்ட இது பயன்படுகிறது. இது சுவருக்கு ஒரு முப்பரிமாண (3D) தோற்றத்தைத் தரும்.

**2. புதிய வீடு மற்றும் பழைய வீடுகளுக்கான நடைமுறைகள்**

புதிய வீடு **(New Construction):**

புதிய வீட்டிற்கு வர்ணம் பூசுவ தற்கு முன் சுவர்கள் முழுமையாக உலர்ந்திருக்க வேண்டும். சிமெண்ட் பூச்சு பூசப்பட்ட பிறகு குறைந்தது 3 முதல் 6 மாதங்கள் வரை இடைவெளி விடுவது நல்லது.

சுத்தம் செய்தல்: சுவரில் உள்ள சிமெண்ட் துகள்கள் மற்றும் மணலை உப்புத் தாள் (Sand paper) கொண்டு தேய்க்க வேண்டும்.

பிரைமர் **(Primer):** வர்ணம் சுவரில் நன்றாக ஒட்டுவதற்கு ஒரு கோட் பிரைமர் அடிக்க வேண்டும்.

புட்டி **(Putty):** விரிசல்களை மறைக்கவும், சுவரை கண்ணாடி போல வழுவழுப்பாக்கவும் இரண்டு கோட் புட்டி இட வேண்டும்.

இறுதி வர்ணம்: அதன் பிறகு இரண்டு அல்லது மூன்று கோட் பெயிண்ட் அடிக்க வேண்டும்.

பழைய வீடு **(Repainting)**

பழைய வீட்டைப் புதுப்பிக்கும் போது கூடுதல் கவனம் தேவை.

சுரண்டுதல்: பழைய பெயிண்ட் உரிந்து வரும் இடங்களில் ஸ்கிராப்பர் கொண்டு முழுமையாகச் சுரண்ட வேண்டும்.

ஈரப்பதம் கவனிப்பு: சுவரில் கசிவு அல்லது உப்புத்தன்மை (Efflore scence) இருந்தால், அதைச் சரி செய்யாமல் வர்ணம் பூசக்கூடாது.

பூஞ்சை நீக்கம்: பாசி அல்லது பூஞ்சை இருந்தால் ப்ளீச்சிங் பவுடர் கலந்த நீரால் கழுவ வேண்டும்.

**3. வர்ணம் பூச ஏற்ற காலம்**

வர்ணம் பூசுவதற்கு வானிலை மிக முக்கியம்.

சிறந்த காலம்: கோடைக்காலம் (பெப்ரவரி முதல் ஜூன் வரை) மிகவும் ஏற்றது. வெப்பம் அதிகமாக இருக்கும்போது வர்ணம் விரைவாகவும் சீராகவும் காயும்.

தவிர்க்க வேண்டிய காலம்: மழைக் காலத்தில் வர்ணம் பூசுவதைத் தவிர்க்க வேண்டும். ஈரப்பதம் காரணமாக பெயிண்ட் சுவரில் ஒட்டாது. மேலும் அது காய்வதற்கு அதிக நேரமெடுப்பதால் துர்நாற்றம் வீசக் கூடும்.

**4. மக்கள் செய்யும் பொதுவான தவறுகளும் திருத்தும் முறைகளும்**

தவறுகள்:

❖ மலிவான பெயிண்ட்களைத் தேர்ந்தெடுப்பது

❖பிரைமர் அடிக்காமல் நேரடியாக பெயிண்ட் அடிப்பது

❖காய்வதற்கு முன் அடுத்த கோட் அடிப்பது

❖வானிலையை கவனிக்காமல் இருப்பது

திருத்தும் முறைகள்:

❖ தரமான பிராண்டுகளைத் தேர்ந்தெடுப்பது நீண்ட காலச் செலவைக் குறைக்கும்

❖பிரைமர் அடித்தால் மட்டுமே பெயிண்ட் உரிய நிறத்தைத் தரும் மற்றும் நீண்ட நாள் நீடிக்கும்

❖ஒரு கோட் அடித்த பிறகு குறைந்தது 4-6 மணிநேரம் காய விட வேண்டும்

❖வெயில் காலத்தைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பூஞ்சைத் தொல்லையைத் தவிர்க்கலாம்.

**5. உட்புறம் மற்றும் வெளிப்புறச் சுவர்கள்** (Interior vs Exterior)

உட்புறம்: இங்கே நாம் அதிக நேரம் செலவிடுவதால், நச்சுத் தன்மையற்ற (Low VOC) பெயிண்ட்களைத் தேர்வு செய்ய வேண்டும். கண்ணைக் கவராத அமைதியான நிறங்கள் (Pastel colors) மன அமைதி தரும்.

வெளிப்புறம்: வெயில், மழை மற்றும் தூசியைத் தாங்கக்கூடிய "வெதர் கோட்" (Weather Coat) பெயிண்ட்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். இது சுவர்களுக்குக் குடை போலப் பாதுகாப்பு அளிக்கும்.

**6. சிக்கனமான முறைகள்**

❖வர்ணம் பூசுவதில் பணத்தை மிச்சப் படுத்தச் சில வழிமுறைகள்:

❖நேரடி கொள்முதல்: பெயிண்ட்களை மொத்தமாக (Bulk) வாங்கும்போது சலுகைகள் கிடைக்கும்.

❖வெள்ளை நிறம்: மேற் கூரைகளுக்கு (Ceiling) எப்போதும் வெள்ளை நிறத்தைப் பயன்படுத்தலாம். இது வெளிச்சத்தை அதிகரித்து, மின்சாரச் செலவையும் குறைக்கும்.

❖புட்டி பயன்பாடு: நல்ல தரமான புட்டி பயன்படுத்தினால், அதிகப்படியான பெயிண்ட் செலவாவதைத் தவிர்க்கலாம்.

❖திட்டமிடுதல்: வேலையைத் தொடங்கும் முன்பே பரப்பளவைக் கணக்கிட்டுத் தேவையான அளவு மட்டும் பெயிண்ட் வாங்க வேண்டும்.

**7 நிறங்களின் தெரிவுகளில் கொள்ள வேண்டிய கவனம்**

வீட்டின் வர்ணங்களைத் தேர்ந்தெடுப்பது என்பது வெறும் விருப்பம் சார்ந்த விடயம் மட்டுமல்ல அது அந்த அறையின் வெளிச்சம், அளவு மற்றும் அங்கு வசிப்பவர்களின் மனநிலை ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நிறங்களின் தேர்வில் கவனிக்க வேண்டிய அடிப்படை விதிகள்:

1. அறையின் அளவைப் பொறுத்த தேர்வு

சிறிய அறைகளுக்கு வெள்ளை, வெளிர் நீலம் (Baby Blue), அல்லது கிரீம் (Cream) போன்ற லேசான நிறங்களை (Light Colors) பயன்படுத்த வேண்டும். இவை அறையைப் பெரியதாகவும், விசாலமானதாகவும் காட்டும். பெரிய அறைகளுக்கு அடர் நிறங்களை (Dark colors) ஒரு சுவரில் மட்டும் (Accent wall) பயன்படுத்துவது அந்த அறைக்கு ஒரு நேர்த்தியான தோற்றத்தைத் தரும்.

2. வெளிச்சத்தின் தாக்கம் **(Lighting)**

வர்ணத்தைத் தேர்வு செய்வதற்கு முன், அந்த அறையில் இயற்கை வெளிச்சம் (சூரிய ஒளி) எவ்வளவு கிடைக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். வெளிச்சம் குறைவாக உள்ள அறைகளுக்கு அடர் நிறங்களைத் தவிர்ப்பது நல்லது. இல்லையெனில் அறை இருட்டாகத் தோன்றும்.

3. அறையின் பயன்பாட்டிற்கு ஏற்ப நிறங்கள்

ஒவ்வொரு அறைக்கும் ஒரு தனித்துவமான குணம் உண்டு. அதற்கு ஏற்ப நிறங்களை மாற்றலாம்:

வரவேற்பு அறை (Living Room): விருந்தினர்களை வரவேற்கும் இடம் என்பதால், உற்சாகம் தரும் பீச் (Peach), மென்மையான மஞ்சள் அல்லது சாம்பல் (Grey) கலந்த நிறங்கள் சிறப்பாக இருக்கும்.

படுக்கையறை **(Bedroom):** தூக்கத்திற்கும் அமைதிக்கும் உகந்த நீலம் (Blue) அல்லது பச்சை (Green) போன்ற மென்மையான நிறங்கள் (Cool colors) மன அழுத்தத்தைக் குறைக்கும்.

சமையலறை **(Kitchen):** பசியைத் தூண்டும் மற்றும் சுறுசுறுப்பைத் தரும் சிவப்பு, ஆரஞ்சு அல்லது மஞ்சள் நிறங்கள் இங்கே பொருத்தமாக இருக்கும்.

பூஜை அறை: அமைதி மற்றும் புனிதத் தன்மையைக் குறிக்கும் வெள்ளை அல்லது வெளிர் மஞ்சள் நிறங்கள் ஏற்றவை.

4. 60-30-10 விதி **(The 60-30-10 Rule)**

வண்ணங்களைச் சமநிலைப் படுத்த உட்புற வடிவமைப்பாளர்கள் (Interior Designers) இந்த விதியைப் பயன்படுத்துகின்றனர்:

60% முதன்மை நிறம்: சுவர்களின் பெரும்பகுதிக்கு (லேசான நிறம்).

30% இரண்டாம் நிலை நிறம்: திரைச் சீலைகள், சோபா அல்லது ஒரு குறிப்பிட்ட சுவருக்கு.

10% கூடுதல் நிறம் **(Accent):** குஷன்கள், கலைப்பொருட்கள் அல்லது அலங்கார வேலைப்பாடுகளுக்கு (அடர் நிறம்)

**8 முடிவுரை**

வீட்டிற்கு வர்ணம் பூசுவது என்பது ஒரு கலை. சரியான காலச்சூழலில், தரமான பொருட்களைக் கொண்டு, முறையான வழிமுறைகளைப் பின்பற்றினால் உங்கள் இல்லம் பல ஆண்டுகளுக்குப் பொலிவுடன் விளங்கும். வர்ணங்கள் உங்கள் சுவர்களைக் காப்பதுடன், உங்கள் வாழ்வையும் வண்ணமயமாக்கும்.

**இலங்கை பொறியியலாளர் சங்கம்,**
**வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

03.02.2026
தை 20, செவ்வாய்க்கிழமை
துதியை பின்னிரவு 2.59 மணிவரை

மகம் பின்னிரவு 12.24 மணிவரை
சுப நேரம் -11.05-12.35 மணிவரை
இராகு காலம் 3.35-5.05 மணிவரை

சந்திராஷ்டமம்
பூராடம்,உத்தராடம்

**வளவன்**

**மேஷம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்:** குடும்பத்தினர் பெருமையடையும் வகையில் சில சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போன்று உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**ரிஷபம்:** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பயணங்களால் பலனுண்டு,தொழில் வளர்ச்சி கூடும் நாள், சேமிப்புகள் உயரும் வாய்ப்புண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம்.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**மிதுனம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கன்னி:** விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவான நாள்.

**தனுசு:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்,உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், போசன நன்மையுண்டு.

**மீனம்:** சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டும் நாள், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், செய் தொழிலில் மேன்மையுண்டு, கடமையில் கண்ணும்கருத்துமாக இருப்பீர்கள்.

**எவ்வாறான பெரிய கோழையையும் வீரனாக மாற்றும் சக்தி கொண்டது காதல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 969





ஆனால் நான் ஒன்றும் செய்யவில்லையே? ஆபத்தான சமயத்தில் தங்களுக்கு உதவி செய்ய முடியாதவனாகி விட்டேனே?" என்றான்.

"நீ மரக் கிளையைப் பிடித்து உலுக்கிச் சத்தமிட்டாய் அல்லவா? அப்போது நான் குதிரை அடியிலிருந்து வெளி வந்து உன் வேலை எடுத்துக் கொண்டேன். என் மனத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த கோபத்தையெல்லாம் பாவம், இந்தப் பன்றியின் பேரில் பிரயோகித்தேன். வேலினால் குத்தப்பட்டதும் அது பயங்கரமாகச் சத்தமிட்டது. என் காதே செவிடாகி விடும் போலிருந்தது. ஆனால் வேலினால் மட்டும் அது சாகவில்லை. நீ மரக்கிளையிலிருந்து நழுவி அதன் பேரில் விழுந்தாய் அந்த அதிர்ச்சியினால் தான் செத்தது!" என்று கரிகாலர் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

வந்தியத்தேவனும் அதை நினைத்து நினைத்துச் சிரித்தான். உடம்பைத் தடவிப் பார்த்துக் கொண்டு "பன்றியின் மேல் விழுந்ததினாலேயேதான், காயம் படாமல் தப்பினேன் போலிருக்கிறது. மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்து இரணியாட்சனைக் கொன்றார் என்பதை இனி என்னால் நம்ப முடியும். அப்பா! எவ்வளவு மூர்க்கமான பிராணி" என்றான்.

"இந்தச் சிறு காட்டுப் பன்றியைப் பார்த்துவிட்டு வராக அதாரத்தை மதிப்பிடாதே, தம்பி! வடக்கே விந்திய மலையைச் சேர்ந்த காடுகளிலே தலையிலே ஒற்றைக் கொம்பு உள்ள பன்றி ஒன்று இருக்கிறதாம். ஏறக்குறைய யானையளவு பெரியதாயிருக்குமாம். அந்த மாதிரி பன்றியாயிருந்து, நீ ஏறியிருக்கும் மரத்தை முட்டியிருந்தால், மரம் என்னபாடு பட்டிருக்கும் என்று யோசித்துப் பார்!" என்றார் இளவரசர்.

"மரம் அடியோடு முறிந்து விழுந்திருக்கும், தாங்கள் எறிந்த வேலும் முறிந்திருக்கும். நம் கதி அதோ கதியாகியிருக்கும். சோழ குலத்தின் எதிரிகளுக்கு வேலை மிச்சமாகப் போயிருக்கும்" என்றான் வந்தியத்தேவன்.

"தம்பி! உண்மையைச் சொல்லு! என் குதிரை தடுமாறி விழுந்தவுடனே நீ வேலை எறிந்தாயே? அந்தக் காட்டுப்பன்றியின் மேல் எறிந்தாயா? என் பேரில் எறிந்தாயா?" என்று ஆதித்தகரிகாலர் கேட்டார்.

வந்தியத்தேவன் ஆத்திரத்துடன், "ஐயா! உண்மையாகவே தாங்கள் இந்த கேள்வி கேட்கிறீர்களா? அப்படித் தாங்கள் சந்தேகப்படுவதாயிருந்தால் பன்றியைக் கொன்று என்னைக் காப்பாற்றியிருக்க வேண்டிய அவசியம் இல்லையே?" என்றான்.

"ஆமாம் ஆமாம்! உன் பேரில் சந்தேகப்படக் கூடாதுதான். நீ மரக்கிளையை ஆட்டிக் கொண்டு கூச்சல் போட்டிராவிட்டால் எனக்கே அந்தப் பன்றி யமனாக இருந்திருக்கும். ஆனாலும் நீ வேலை எறிந்த போது ஒரு கணம் எனக்கு அத்தகைய சந்தேகம் உண்டாயிற்று. இப்போதெல்லாம் எனக்கு எதைப் பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் வீண் சந்தேகம் தோன்றுகிறது.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## நன்றி செலுத்துவது யார்?



ஜப்பான் நாட்டில் எங்சரு என்பவர் சிறந்த ஆசிரியராக விளங்கினார். அவரிடம் கல்வி கற்பதற்காக நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான மாணவர்கள் வந்த வண்ணம் இருந்தார்கள்.

வந்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகமானதால் அவர்கள் தங்குவதற்காகப் பள்ளி ஒன்றைக் கட்ட எண்ணம் கொண்டார் அவர் அதற்காக நிதி திரட்டத் தொடங்கினார்.

இதை அறிந்த வணிகன் ஒருவன் நாம் பெருந்தொகை ஒன்றை அவரிடம் தருவோம். அதைக் கொண்டு அவர் பள்ளியைப் பெரிதாகவே கட்டலாம்" என்று நினைத்தான்.

தன்னிடமிருந்த ஐந்நூறு பொற்காசுகளை அவரின் முன்வைத்தான் அவன்.

"நான் இந்தத் தொகையை எடுத்துக் கொள்கிறேன்" என்று சொன்னார் அவர்.

"தன் செயலுக்காக ஆசிரியர் பெருமளவில் நன்றி சொல்லித் தன்னைப் பாராட்டுவார்" என்று எதிர்பார்த்த வணிகன் ஏமாற்றம் அடைந்தான்.

ஆசிரியரைப் பார்த்து "ஐயா இதில் ஐந்நூறு பொற்காசுகள் உள்ளன. நம் நாட்டில் ஒருவன் ஆயுள் முழுவதும் உழைத்தாலும் பத்துப் பொற்காசுகள் சேமிக்க முடியாது.

நான் பெரிய வணிகன் தான் ஆனாலும் இந்த ஐந்நூறு பொற்காசுகள் மிகப் பெரிய தொகை தான்" என்று இழுத்தான்.

"அதற்காக நான் உனக்கு நன்றி சொல்ல வேண்டும். அதைத்தானே எதிர்பார்க்கிறாய்? என்று வெளிப்படையாகக் கேட்டார் அவர்.

"நான் செய்த இந்தச் செயலுக்குத் தாங்கள் நன்றி செலுத்தியே ஆக வேண்டும்" என்றான் அவன்.

உடனே அவர் "நான் எதற்காக உனக்கு நன்றி செலுத்த வேண்டும்.

இவ்வளவு நல்ல செயலுக்கு உதவி செய்ய உனக்கு வாய்ப்புக் கிடைத்தமைக்காக நீயல்லவா எனக்கு நன்றி சொல்ல வேண்டும்? என்றார். இதைக் கேட்ட அவன் வாயடைத்து நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளில் தேங்கிக்கிடப்பதே முன்னேற்றத்திற்கான முக்கிய தடையாகும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொய்யாக இருப்பினும் தேர்தல் நடக்கும் எனலாமே

*பொய்மையும் வாய்மையிடத்து புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்*
என்கிறார் வள்ளுவர்.

பொது நன்மை கருதி பொய் உரைப்பது தவறல்ல என்பது வள்ளுவர் கூறிய குறளுக்கான பொருளாம்.

இங்குதான் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உண்மையைக் கூறி தமிழ் மக்களுக்கு குந்தகம் இழைத்துவிட்டார்.

இதை நாம் கூறும்போது இஃதென்ன. உண்மையைக் கூறியதால், தமிழ் மக்களுக்குக் குந்தகமா? என்று நீங்கள் கேட்கலாம்.

ஆம், 2026ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவது சாத்தியமில்லை என்பதே அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறிய உண்மை.

இங்கு அமைச்சர் கூறிய உண்மையால் தமிழ் மக்களுக்கு எங்ஙனம் குந்தகம் விளைந்தது எனில், எப்படியும் இந்த ஆண்டு (2026) மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என தமிழ்க் கட்சிகள் மலையாக நம்பியிருந்தன.

அந்த நம்பிக்கை காரணமாக சில தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்படுவதற்கும் தயாராகி இருந்தன.

எனினும் வெண்ணெய் திரண்டுவர தாழி உடைந்ததுபோல, இந்த ஆண்டு தேர்தல் நடைபெறமாட்டாது என அமைச்சர் கூற அந்தோ! கொடுமை. மாகாண சபைத் தேர்தல் இல்லையென்றால், வேண்டாத ஒற்றுமை எதற்கு என்பதாக நிலைமை ஆகப்போகிறது.

உண்மை. தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை அவை தமிழ் மக்களின் நலன் கருதி ஒருபோதும் செயலாற்றவில்லை.

அவ்வாறு தமிழ் மக்களின் உரிமையும் வாழ்வும் என்பதுதான் எமக்கு முக்கியம். மற்றும்படி தேர்தலும் தேர்தல் மூலம் கிடைக்கின்ற பதவிகளும் எமக்கு வேண்டாம் என்ற நிலைப்பாட்டை ஒரு சில தமிழ் அரசியல் கட்சிகளேனும் எடுத்திருந்தால், இன்று தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் இந்த நாட்டில் வாழ்ந்திருப்பர்.

ஆனால் தமிழ்க் கட்சிகள் என்றாலே அவற்றின் ஒட்டுமொத்த நோக்கமும் தேர்தல் – பதவி என்பதாகவே இருக்கின்றன.

இதன் காரணமாகவே தமிழ் அரசியல் கட்சிகளால் ஒற்றுமைப்பட முடியவில்லை.

சில வேளைகளில் தேர்தலை மையப்படுத்தி ஒற்றுமைப்பட்டிருந்தாலும் கூட, தேர்தல் காலத்திலேயே ஒருவரை ஒருவர் வஞ்சிக்கும் அளவில் நடந்து கொள்ள, தேர்தல் முடிந்த கையோடு ஒற்றுமையும் உடைந்து சின்னாபின்னமாகின.

நிலைமை இதுவாக இருக்கையில், கடந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி யாழ். மாவட்டத்தில் மட்டும் மூன்று ஆசனங்களைத் தனதாக்கிக் கொள்ள,

அட! பதவிக்காக நாங்கள் எங்களைக் கந்தறுக்க அந்த ஊடில் ஜனாதிபதி அநுர யாழ். மாவட்டத்தில் மூன்று ஆசனத்தை தனதாக்கி விட்டார்.

ஆகையால், மாகாண சபைத் தேர்தலிலேனும் நாங்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் ஆர்வம் கொண்ட நேரத்தில், அமைச்சர் நளிந்த; 2026இல் மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது எனக் கூறி, தமிழ்க் கட்சிகளுக்கு உள்ளித்தைலம் வைக்க எங்கள் ஒற்றுமை அம்போ என்றாயிற்று.

### கிவுல் ஓயாத் திட்டத்தினால்

# 400 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய, குடியிருப்பு நிலங்கள் முழுமையாக நீரில் மூழ்கும் அபாயம்

## வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழு அறிக்கை

கிவுல் ஓயாத் திட்டத்தினால் பாரம்பரிய கிராமங்களின் 400 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய மற்றும் குடியிருப்பு நிலங்கள் முழுமையாக நீரில் மூழ்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் வெளியிட்டுள்ள அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிவுல் ஓயா நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான சமூக, நில உரிமை மற்றும் பண்பாட்டு பாதிப்புகள் குறித்து நேற்று முன்தினம் (01.02.2026) இடம்பெற்ற சமூக மட்ட விழிப்புணர்வின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்சியாக "கிவுல் ஓயா" நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டம் இலங்கையின் தற்போதைய அரசாங்கம், சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பு, இயற்கை வளங்களின் பாதுகாப்பு மற்றும் சமத்துவமான அபிவிருத்தி என்பவற்றை தனது கொள்கை உறுதிமொழிகளாக முன்வைத்து ஆட்சி பொறுப்பேற்றுள்ளது.

இருப்பினும் "நாட்டின் அபிவிருத்தி" என்ற பெயரில் வடமாகாணத்தில் குறிப்பாக முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் "கிவுல் ஓயா" நீர்த்தேக்க மேம்பாட்டுத் திட்டம், மேற்கூறிய உறுதிமொழிகளுக்கு முரணானதாக அமைந்துள்ளமை குறித்து ஆழ்ந்த கவலையையும் கண்டனத்தையும் தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

நாங்கள் இலங்கை அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் எந்தவொரு அபிவிருத்தித்திட்டங்களுக்கும் எதிரானவர்கள் அல்ல. அபிவிருத்தி என்பது நாட்டின் அனைத்து மக்களுக்கும் சமமாகப் பயனளிக்க வேண்டிய ஒரு அடிப்படை அரசுப் பொறுப்பாகும். இருப்பினும், அபிவிருத்தி என்ற போர்வையில் அரசின் காலனித்துவ நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் முயற்சிகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில், காணி இல்லாத தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பெருமளவில் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய சூழலில்,

இம்மக்களை அபிவிருத்தித் திட்டங்களில் முன்னுரிமையுடன் இணைத்து, அவர்களின் வாழ்வாதார நிலைகளை உயர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய அரசாங்கம்,

அதனை விடுத்து வெளிப்பிரதேசங்களில் இருந்து மக்களை கொண்டு வந்து இப் பிரதேசங்களில் குடியேற்றும் செயற்பாடுகளை முன்னெடுப்பது கவலைக்குரியதாகவுள்ளது. இவ்வாறான குடியேற்றங்கள் தேவையற்ற அரசியல், கலாச்சார மற்றும் சமூகத்தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. *(ம-7)*

### ரூ. 80 இலட்சம் பெறுமதியான

## ஐஸ் போதைப்பொருளுடன் இளம் தம்பதியினர் கைது

*(புத்தளம்)*

புத்தளம் பொலிஸாரின் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது, சுமார் 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான 524 கிராம் ஐஸ் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனைமடுவ பகுதியைச் சேர்ந்த 28 மற்றும் 23 வயதுடைய தம்பதியினரே நேற்று முன்தினம் (01)புத்தளம் மெல்லன் குளம் பகுதியில் வைத்து இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இப்பாக மூவ பகுதியில் உள்ள தமது பாட்டியின் வீட்டில் தங்கியிருந்து போதைப் பொருள் வியாபாரத்தை முன்னெடுத்து வந்துள்ளமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

வெளிநாடுகளில் உள்ள போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் இந்தத் தம்பதியினர் நேரடித் தொடர்புகளைப் பேணி வந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்ற நிலையில் இது குறித்த மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக சந்தேக நபர்களைத் தடுத்து வைத்து விசாரணை செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். *(ம-7)*

### திருகோணமலை – கந்தளாயில்

## யானை தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

*(திருகோணமலை)*

திருகோணமலை கந்தளாய் - அக்போபுர பகுதியில் காட்டு யானை தாக்குதலில் விவசாயி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம்(01) இரவு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அக்போபுர, யூனிட் 19 பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான டி.டி. சிறிசேன (வயது 43) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நெல் வயலை காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்காக காவலுக்குச் சென்றிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. *(ம-7)*

### மன்னார் நாச்சிக்குடாவில்

## ஆமை இறைச்சி, முட்டைகளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, நாச்சிக்குடா கடற்கரைப் பகுதியில் இலங்கைக் கடற்படை நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது ஆமை இறைச்சி, ஆமை முட்டைகளுடன் மூன்று(03) சந்தேக நபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளதோடு அவர்களிடமிருந்து படகு ஒன்றையும் கைப்பற்றி உள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 17 கிலோ ஆமை இறைச்சி மற்றும் 39 ஆமை முட்டைகள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மன்னார், நாச்சிக்குடா பகுதியில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர்கள் 26 முதல் 32 வயதுக்குட்பட்டவர்கள் என கடற்படை தெரிவித்துள்ளது. *(ம-7,285)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை 13

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

என். சொக்கன்

கியூபாவில் தங்களுக்கு முளைத்திருக்கிற புது அபாயத்தைத் தெரிந்து கொள்வதற்கு, சிஐஏயிற்கு பூதக்கண்ணாடி எதுவும் தேவைப்படவில்லை. அங்கே புதிதாக சில ஏவுகணைத் தளங்கள் அமைக்கப்பட்டுக் கொண்டிருப்பதைப் புகைப்படங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டின.

ஆனால், அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள், மற்ற தடங்கல்களால் அப்போதுதான் தட்டுத்தடுமாறி முன்னேறிக் கொண்டிருந்த தேசம் கியூபா. ஏவுகணை தயாரிக்கும் அளவுக்கு அவர்களிடம் ஏது காசு?

கியூபாவிடம் காசு இல்லைதான். ஆனால், சோவியத் யூனியனிடம் இருக்கிறதே. தன்னுடைய நெடுநாள் விரோதிகள் இருவரும் இந்த விடயத்தில் கைகோர்த்துக்கொண்டு செயற்படத் தொடங்கிவிட்டார்கள் என்பதைப் புரிந்துகொண்டது அமெரிக்கா.

சோவியத் யூனியனின் பிரமாதமான ராஜ தந்திர நடவடிக்கை அது. இதன்மூலம், அவர்களுக்குக் கண்டம் விட்டுக் கண்டம் பாய்கிற ராட்சஸ ஆயுதங்களைத் தயாரிக்கக்கூட அவசியம் இல்லை. குறைந்த தூரம் பாயக்கூடிய ஏவுகணைகளை உருவாக்கினாலே போதும்.

இந்த ஏவுகணைகள், சோவியத் யூனியனிலிருந்து பறந்து வந்து அமெரிக்காவைத் தாக்கமுடியாது தான். ஆனால், அமெரிக்காவிலிருந்து சொற்ப தூரத்தில் இருக்கிற கியூபாவிலிருந்து ஏவினால்?

அமெரிக்காவை மிரட்டிப் பணிய வைப்பதற்கு இது ஒன்றுதான் வழி என்று சோவியத் யூனியன் தீர்மானித்திருக்கலாம். "வாருங்கள், இந்த நல்ல காரியத்துக்கு கியூபாவைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று தாராளமாகக் கதவைத் திறந்து வைத்துவிட்டார் ஃபிடல் காஸ்ட்ரோ.

இனிமேல் ரகசிய உளவெல்லாம் சரிப்படாது என்று நினைத்த அமெரிக்கா, கியூபாவில் சோவியத் ஏவுகணைகள் தாக்குதலுக்குத் தயாராகிக்கொண்டிருப்பதாக அறிவித்தது. இந்த விடயம் தங்களுக்கு எப்படித் தெரியும் என்றெல்லாம் சொல்லவில்லை. ஆனால், "இது அமெரிக்காவுக்கு எதிரான மறைமுக யுத்தம்" என்று பொறுமினார் அதிபர் கென்னடி.கியூபாவில் நடப்பவை அனைத்தும், அமெரிக்காவின் பாதுகாப்புக்கு விரோதமானவை. ஆகவே, உடனடியாக அவர்கள் இந்தச் சில்மிஷங்களை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்றது அமெரிக்கா."

காஸ்ட்ரோவா கேட்கிற ஆள்? "சரிதான் போய்யா" என்று அவர் தன்னுடைய வேலையைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்துவிட்டார்.

ஒருகட்டத்தில், அமெரிக்காவின் பொறுமை கடந்துவிட்டது. 1962 ஒக்டோபர் இறுதியில், அமெரிக்கா கியூபாமீது படையெடுக்கப்போவதாக அறிவித்தது.

அதன்பிறகுதான், இந்த விவகாரத்தில் ஒரு முடிவு வந்தது. சோவியத் யூனியன் தனது ஏவுகணைகளை கியூபாவிலிருந்து விலக்கிக் கொள்ள முன்வந்தது. இதைத் தொடர்ந்து, அமெரிக்கா தனது தாக்குதல் முயற்சிகளை நிறுத்திக்கொண்டது.



அப்போதும், அவர்கள் சோவியத் யூனியன், கியூபாவை முழுமையாக நம்பவில்லை. சிஐஏ தனது உளவு விமானங்களைத் தொடர்ந்து இந்த இரு நாடுகளின் எல்லைகள்மீது பறக்கச் செய்து நிமிடத்துக்கு நிமிடம் ஃபோட்டோ பிடித்துக்கொண்டிருந்தார்கள்.

இந்தப் புகைப்படங்களின்மூலம், சோவியத் ஏவுகணைகள் கியூபாவிலிருந்து அகற்றப்படுவது உறுதிப்படுத்தப்பட்டது. இந்தத் தகவல் சிஐஏ அறிக்கையாக அமெரிக்க ஜனாதிபதியைச் சென்றடைந்தபிறகுதான், அவர் கொஞ்சம் நிம்மதியாக மூச்சுவிடத் தொடங்கினார். ஒரு வேளை சோவியத் ஏவுகணைகள் கியூபாவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டுத் தயாராகியிருந்தால், அவர்களால் அந்த முக்கிய அமெரிக்க நகரத்தையும் அழித்திருக்கமுடியும்.

இப்படி ஓர் அதிபயங்கரமான ஆபத்திலிருந்து தப்பிப் பிழைத்திருக்கிறோம் என்கிற நினைப்பு, சிஐஏவைச் சும்மா உட்கார அனுமதிக்கவில்லை. இன்றைக்கு கியூபாவிலிருந்து ரொக்கெட் விட நினைத்த சோவியத், நாளைக்கு வேறொரு திசையில் ஏதோ ஓர் ஆளில்லாத தீவில் உட்கார்ந்துகொண்டு மறுபடியும் அமெரிக்காவை மிரட்டமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? இதனால், சிஐஏ மீண்டும் தங்களது உளவு நடவடிக்கைகளைத் தீவிரமாக்கினார்கள். அமெரிக்காவுக்கு எதிராக, அல்லது, அமெரிக்க விரோதிகளுக்கு ஆதரவாக உலகம்முழுவதும், யார் என்ன செய்கிறார்கள் என்பதைத் தெளிவாகத்தெரிந்து கொண்டாக வேண்டும்.

இந்த விடயத்தில் நட்பு நாடு, எதிரி நாடு என்கிற வித்தியாசமே வேண்டாம். "என் கடன் உளவு செய்து கிடப்பதே" என்று எல்லோர் மீதும் தங்களது விமானங்களை ஏவி ஃபோட்டோ பிடிக்கத் தொடங்கியது சிஐஏ. மிஞ்சிய நேரத்தில், அந்தந்த ஊர்களில் சிஐஏ அலுவலகங்களை ரகசியமாக அமைத்து, உள்ளூர் ஆட்களை ஏஜென்ட்களாக பிடித்துப்போட்டார்கள்.

உளவுத்துறையில், இயந்திரங்களைவிட மனித உளவாளிகள், ஒற்றர்களுக்குதான் மரியாதை அதிகம். ஆனால், எல்லாவற்றுக்கும் மனிதர்களை நம்பிக்கொண்டிருக்க முடியாது. வருடத்தில் எல்லா நாட்களும், இருபத்து நான்கு மணி நேரமும் உலகத்தைத் தொடர்ந்து கண்காணிக்கவேண்டிய அவசியம் சிஐஏவுக்கு இருந்தது. அத்தனை உளவாளிகளுக்கு எங்கே போவது?

இங்கேதான், சிஐஏயிற்குத் தொழில்நுட்பம் கைகொடுத்தது. தங்களது உளவு நடவடிக்கைகளுக்குச் செயற்கைக் கோள்களைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். செயற்கைக் கோள் தயாரிப்பதும், அதை விண்ணில் சுற்றிவரச் செய்வதும் ஏகப்பட்ட செலவு பிடிக்கிற சமாசாரம். இதற்கு வசதியாக, அமெரிக்க அரசாங்கம் சிஐஏயின் வருடாந்திர பட்ஜெட்டைப் படிப்படியாக உயர்த்திக்கொண்டிருந்தது.

வெளிநாடுகளை உளவு பார்ப்பதற்காக இத்தனை டொலர் செலவழிக்கவேண்டுமா என்று யாரும் அமெரிக்காவைக் கேள்வி கேட்கவில்லை. அப்படியே கேட்டாலும், இரண்டே வார்த்தைகளில் அவர்களை அடக்கிவிடுவார்கள் - தேசப் பாதுகாப்பு. அதைவிட, வேறெதுவும் முக்கியமில்லை.

எழுபதுகளின் இறுதிவரை, அமெரிக்கா தங்களது உளவுச் செயற்கைகோள்களைப்பற்றி வெளியே சொல்லவில்லை. விமானத்தில் ஆள் அனுப்பினால்தானே சுட்டுக் கீழே இறக்குவீர்கள், இப்போது என்ன செய்யமுடியும் என்று கமுக்கமாக இருந்துவிட்டார்கள்.

பனிப்போரின் உச்சத்தில், அமெரிக்கா, சோவியத் இரண்டுமே இப்படி ஏட்டிக்குப் போட்டியாக நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அடுத்தவரை உளவு பார்க்கும் முயற்சிகளில் இறங்கியிருந்தன. இதனால், சிஐஏயின் பட்ஜெட்டும் அதிகார பலமும் பல மடங்கு அதிகரிக்கப்பட்டிருந்தது. இதன் பின்விளைவு சாத்தியங்களை, அமெரிக்காவோ, சோவியத் யூனியனோ, மற்ற நாடுகளோ அப்போது உணரவில்லை.

சொந்த நாட்டைப் பாதுகாப்பது என்கிற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட சிஐஏ, கொஞ்சம் கொஞ்சமாக அதீத சக்தி வாய்ந்த ஓர் இயக்கமாக மாறிக்கொண்டிருந்தது. இப்படி அதன் பலம் அதிகரிக்கும்போது, சிஐஏவின் அடிப்படை நோக்கம் வேறோர் உருவம் எடுத்துவிட்டது. கொஞ்சம் புரியும்படி சொல்வதானால், நம் வீட்டுக்கு ஒரு காவல்காரர் இருக்கிறார்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ...

விபத்துச் சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனத்தைச் செலுத்திய பெண் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவப் பொலிஸார் மற்றும் பலாலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,104)

## வயிற்றோட்டம்...

இந்நிலையில் அன்றைய தினம் பிற்பகல் 5.00 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு அவர் உயிரிழந்தார்.

வயிற்றோட்டம் ஏற்பட்டு, உடலில் நீர்ச்சத்து குறைந்து கிருமித்தொற்றினால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60,104)

## குடும்பஸ்தரின்...

வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இராசலிங்கம் (வயது-96) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த குடும்பஸ்தர் எந்தவிதமான நோய்களும் இன்றி ஆரோக்கியமானதாக இருந்துள்ளார். தனக்கு இவ்வளவு வயதாகியும் ஏன் மரணம் வரவில்லை என்ற மனவிரக்தியில் இருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அவரைக் காணவில்லை எனத் தேடிய போது அவரது சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

அவர் கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழப்புத் தொடர்பான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60,104)

## 49 கைதி...

அரசியலமைப்பின் 34வது உறுப்புரையின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளுக்கு, அவர்கள் பூர்த்தி செய்த ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு வாரம் என்ற அடிப்படையில் மன்னிப்பு வழங்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 75000 ரூபாவுக்கும் குறைந்த அபராதத் தொகையை செலுத்தத் தவறியமைக்காக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளின் எஞ்சிய தண்டனைக் காலமும் இரத்துச் செய்யப்படவுள்ளது. (ம-7)

## வவுனியாவில்...

தில் இரண்டு பெண்கள் உட்பட ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் பகுதி நோக்கி வந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டியும் பூந்தோட்டம் பகுதியிலிருந்து நகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த மற்றொரு முச்சக்கர வண்டியும் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் இரு முச்சக்கரவண்டிகளின் சாரதிகள், அதில் பயணம் செய்த இரு பெண்கள் உட்பட 7 பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## இளைஞனைப்...

மன்றத்தினால் குறித்த மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

கடந்த 2014ஆம் ஆண்டு மாசி மாதம் 11ஆம் திகதி அன்று புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டு குரவில் பகுதியில் பூப்புனித நீராட்டு விழா நிகழ்வில் கலந்து கொண்ட இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கக்கத்தினை அடுத்து குறித்த எதிரி அதே இடத்தைச் சேர்ந்த அர்ச்சுனன் றஜீபன் (வயது-19) என்பவரைக் கத்தியால் வயிற்றில் குத்தி படுகாயமேற்படுத்திய நிலையில் படுகாயமடைந்த நபர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த புதுக்குடியிருப்பு பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபரைக் கைது செய்து இரத்த மாதிரிகள், சான்றுப் பொருட்கள் என்பவற்றையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

தொடர்ந்து குறித்த வழக்கானது ஆரம்பத்தில் வவுனியா மேல் நீதிமன்றத்திலும் பின்னர் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குறித்த வழக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டு விசாரணைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் நேற்று குறித்த வழக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ்ராஜா முன்னிலையில் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த எதிரிக்கு எதிர்த்தரப்பு சட்டத்தரணி எஸ்.ஸ்ரீகாந்தா முன்னிலையில் தீர்ப்பு வாசித்துக் காட்டப்பட்டதுடன் குறித்த எதிரியிடம் மன்றிற்கு ஏதாவது கூற விரும்புகின்றீர்களா? என்று கேள்வி கேட்கப்பட்டு அவருக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டதையடுத்து நீதிமன்றத்தின் அனைத்து மின் விளக்குகளும் அணைக்கப்பட்டு அனைவரும் எழுந்து நின்று மரண தண்டனைத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ம-7,315)

## சமலின்...

தேக நபராகச் சேர்க்கப்பட்டுள்ளார். அவரைக் காவலில் எடுத்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிமன்றம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவுறுத்தியுள்ளது.

2013ஆம் ஆண்டு 14 ஏர்பஸ் விமானங்களை வாங்கியதில் ஏற்பட்ட இலஞ்சம் மற்றும் பணமோசடி வழக்கில், ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேன மற்றும் அவரது மனைவி பிரியங்கா விஜேநாயக்க ஆகியோர் முதல் மற்றும் இரண்டாவது சந்தேக நபர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.

பிரெஞ்சு விண்வெளி நிறுவனமான ஏர்பஸிடமிருந்து 2 மில்லியன் அமெரிக்க டொலர் இலஞ்சம்பெற்றதாகவும், பரிவர்த்தனையின் ஒரு பகுதியாக நிதியை மோசடி செய்ததாகவும் அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2026.02.02 — சீட்டிழுப்பு இலக்கம் 6093 — A 1 2 2 8 7 9
அத சம்பத — A 2 8 7 9 — சீட்டிழுப்பு இலக்கம் 0668
சுப தவசக் — திகதி 2026.02.02 — 209 — துலாம் 06 08 28 — 2630
தன நிதானய — திகதி 2026.02.02 — சீட்டிழுப்பு இலக்கம் 2123 — I 01 61 73 77 I
மெகா பவர் — திகதி 02/02/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2441 — X 20 53 57 66 67
ஜய — திகதி 2026.02.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0361 — Y 0 2 3 7
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4335 — சீட்டிழுப்பு திகதி 02.02.2026 — Z 02 04 24 70 — Z
ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.02.02 — சீட்டிழுப்பு இலக்கம் 1402 — கும்பம் 06 25 26 33 கும்பம்
ஸுபிரி தன சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — 02.02.2026 — வெற்றி வாரம் 0801 — G 5 8 9 6 2 3 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,306,338.40
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3067 — சீட்டிழுப்பு திகதி 2026.02.02 — தினம் திங்கட்கிழமை — 06 23 46 80 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 94,921,209.60
சனிதா — திகதி 02.02.2026 — வெற்றி வாரம் 5228 — 16 22 70 72 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,616,474.00
சசிரி — வெற்றி வாரம் 897 — சீட்டிழுப்பு திகதி 02.02.2026 — திங்கட்கிழமை — வெற்றி இலக்கங்கள் 23 25 34 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,788,480.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4779 — சீட்டிழுப்பு திகதி 02.02.2026 — தினம் திங்கட்கிழமை — 25 35 51 57 — மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,860,261.20
கப்றுக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — E 03 45 50 66 68 — 2243 — 02.02.2026 திங்கட்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.625,525,492.40
அத கோடிபதி — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 2893 — சீட்டிழுப்பு திகதி 2026.02.02 — 44 53 61 68 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.85,130,053.60


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நகுலேஸ்வரரின்...

ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றானதும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புக்களையும் கொண்டது மான வரலாற்றுப் புகழ்பெற்ற கீரிமலை நகுலேஸ்வரம் நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமான் ஆலயத்தின் வருடாந்த சிவ மகோற்சவ பெருவிழா நேற்று (02) கொடியேற்றத்துடன் பக்தி பூர்வமாக ஆரம்பமாகியது.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெற வுள்ள இவ்வாலய மகோற்சவந்தனில் எதிர் வரும் 15.02.2026 ஞாயிற்றுக் கிழமை சிவராத்திரி நன்னாளில் காலை இரதோற்சவப்பெருவிழாவும் மாலை முதல் விசேட சிவராத்திரி பூஜை வழி பாடுகளும் நடைபெற்று திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு புனித கண்டகி தீர்த்தக் கடற்கரையில் தீர்த்தோற்சவ மும் இடம்பெறவுள்ளது. (ம-7)

## ஊர்காவற்...

அவர்களுக்கும் சிவகுரு ஆதீன நம் பிக்கை நிதியத்தின் தலைவர் வேல வன் சுவாமி உள்ளிட்ட அங்கத்தவர் களுக்குமிடையில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அரசாங்க அதிபர், ஊர்காவற்றுறை யில் காணியற்று இருப்பவர்களுக்கு காணி வழங்க முன்வந்தமைக்காக தமது நன்றியினைத் தெரிவித்ததுடன் காணியினை முறையாக பங்கீடு செய்து பங்கீட்டின் அளவிற்கு ஏற்ப வீடமைப் புத் திட்டத்திற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்படுவார்கள் எனவும் அதில் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட் டில் தலா 02 மில்லியன் ரூபாவில் ஒரு குடும்பத்திற்கான வீடமைப்புத் திட்டம் வழங்க முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும் அக்காணியில் குடிநீர், மின்சார இணைப்பு மற்றும் வீதி நிர்மாணிப்பு போன்ற உட்கட்டுமான அபிவிருத்தியினை மேற்கொண்டு ஒரு அமைதியான கிராமமாக உருவாக்க முடியும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த சிவகுரு ஆதீன நம்பிக்கை நிதியத்தி னர், தங்களால் வழங்கவுள்ள 15 ஏக்கர் காணியில் - 10 ஏக்கர் காணியில் காணியற்ற குடும்பங்களுக்கு வீடமைப் புத் திட்டத்திற்காக வழங்கவும் 05 ஏக்கரில் ஒரு ஏக்கர் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தேவைக்காக வழங் கவும் மிகுதி ஆதீனம் மற்றும் பொதுத் தேவைப் பயன்பாட்டிற்காகப் பயன் படுத்த விரும்புவதாகவும் தெரிவித்து, தொடர்ச்சியான சட்டரீதியான கைய ளிப்புத் தொடர்பான கலந்துரையாட லில் ஈடுபடுவதாகவும் தெரிவித்தார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளி நொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4930)

076 825 7716 (ஆகாஸ்)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



## மணப்பெண் தேவை

01.வட்டுக்கோட்டை, இந்து, 1988, பூசம், Data Analysis, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(45522)

02.K.K.S. இந்து, 1993, விசாகம், Masters, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(43203)

03.இணுவில், இந்து, 1990, அனுஷம், Quantity Surveyor, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34984)

04.நீர்வேலி - புலோலி, இந்து, 1991, பூரட்டாதி, Bsc, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(32143)

05.காரைநகர், இந்து, 1989, சித்திரை, Bachelor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(41733)

06.கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(52796)

07.வட்டுக்கோட்டை, இந்து, 1992, விசாகம், CIMA Qualifier, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (33308)

08.உரும்பிராய், இந்து, 1979, கேட்டை, Travel and Tourism management, Divorce, New zealand Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

09.வண்ணார்பண்ணை, இந்து, 1987, சித்திரை, Masters, (MBA), Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

10.திருநெல்வேலி, இந்து, 994, ஆயிலியம், Bsc in computer science, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34159)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு. (6722)


S.Sharma J.P
www.thaalee.com
077 189 0367
077 539 3728



30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம்.

அமரர் **வல்லிபுரம் இராசேந்திரம்**
(முன்னாள் சாரதி)



மலர்வு : 20.01.1917
உதிர்வு : 03.02.1996

அன்பும் பாசமும் கல்வியும்
அளித்து எம்மை நற்
பிரஜைகளாக வாழவைத்த
ஐயா! நீங்கள் மறைந்து
முப்பது ஆண்டுகள்
ஆனாலும் உங்கள்
நினைவுகள் எம் மனதில்
என்றென்றும் நிலைத்
திருக்கும்.

கைலாச பிள்ளையார் கோவிலடி,
நல்லூர். (2011)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்



## பதவி வெற்றிடங்கள்

பொதிகள் சேவை நிறுவனத்திற்கு
பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

Office Staff
Clerk
சம்பளம் 25000 - 55000 (2012)

இடங்கள்:
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார்,
மட்டக்களப்பு, திருகோணமலை

தகுதியுடையோர் தங்களது சுயவிபரக்
கோவையை Whatsapp செய்யவும்.
070 375 002



## பணிப்பெண் தேவை

நன்றாக உணவு சமைப்பதிலும் வீட்டை சுத்தம் செய்வதிலும் நல்ல அனுபவமுள்ள வீட்டுப் பணிப்பெண், யாழ்ப்பாணத்தில் எங்கள் வீட்டில் தங்கி வேலை செய்யத் தேவை. (2014)

தொடர்புகளுக்கு :
076 287 8157



## வேலையாட்கள் தேவை

யாழ். கல்வியங்காட்டில்
இயங்கும் உணவகம்
ஒன்றிற்கு
வேலையாட்கள் தேவை. (6734)

தொடர்புகளுக்கு:
077 929 2093



மணி விழா வாழ்த்தும்
சேவை நலன் பாராட்டும்

திருமதி **விமலேஸ்வரி நவேந்திரன்**



சேவை விபரம்

15.03.1990 - 08.01.2007
மு/கோம்பாவில் விக்னேஸ்வர
வித்தியாலயம்
09.01.2007 - 01.02.2015
மு/சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை
02.02.2015 - 03.02.2026
மு/கோம்பாவில் விக்னேஸ்வர
வித்தியாலயம்

வெஞ்சினம் கொண்டோரையும்
கொஞ்சிக் கதைபேசி அரவணைத்தவளே..
செஞ்சுரம் கொண்ட செயல் வீரி - நீங்கள்
துஞ்சாமல் அரச பணி முடித்தே
எஞ்சிய காலமெல்லாம் மகிழ்வாய் வாழ்ந்திட
நெஞ்சார வாழ்த்துகின்றாள்
கோம்பாவில் விக்னேஸ்வர தாயவள்.

Best Wishes!

வாழ்த்துவோர் :
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
மு/கோம்பாவில் விக்னேஸ்வர வித்தியாலயம்
(6718)



## தோட்ட வேலையாட்கள் 20 பேர் உடனடியாகத் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் உழவர் பண்ணையில் வேலை செய்வதற்கு (45 வயதிற்கு உட்பட்ட ஆண்,பெண்) தோட்ட வேலைகளில் அனுபவம் உள்ள வேலையாட்க்கள் தேவை. (2014)

தொடர்பு: 076 287 8157



## கண்ணீர் அஞ்சலி

திருமதி ஏகாம்பரம்
சிரோன்மணி (பிரான்ஸ்)



(02.02.2026) திங்கட்கிழமை அன்று
பிரான்ஸில் இயற்கை எய்திய பாசமிகு
அன்ரிக்கு கண்ணீர்க் காணிக்கை.

நிழலாய் நம்முடன் நடந்தவரே
இன்று நினைவாய் மட்டும்
நின்று விட்டீர்!
உம் பிரிவின் வலி மட்டும்
அதிகமாய் உள்ளது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

103/1, கோயில் வீதி,
நல்லூர். (C-4933)

பத்மநாதன்
குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org